ஞல ஷீவசாவி.

மலர்-2 இதழ்-1

ஜூலை.ஆக.1992

சித்திரை.

JL
J684ஊ211,N27
N28.2.1
159614

275

Registered No. M. 2260.

169

விபவ ௵ சித்திரை ௴
மலர் 2 இதழ் 1

OFFICE ... OF BOOKS
9-JUL 19..
MADRAS

# ஏல விவசாயி

திருவாங்கூர் ஏல விவசாயிகள்
சங்கத்தி லிருந்து வெளிவரும்
ஒரு மாதப் பத்திரிகை.

---

## THE CARDAMOM PLANTER,

**THE ORGAN**
**of**
**The Travancore Cardamom Planters' Association.**

---

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

# பொருள் அடக்கம்.

| தொடர் நெ. | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | |
| 2. | வாழ்த்துப் பாக்கள் | 2 |
| 3. | இரண்டாவது ஆண்டு | 6 |
| 4. | தமிழ் புது வருடம் | 9 |
| 5. | கிராமப் பிரசாரம் | 12 |
| 7. | செடிகளின் உயிர் வாழ்க்கை | 25 |
| 8. | ஏலம் | 27 |
| 9. | ஆசிரியரின் குறிப்புகள் | 42 |
| 10. | சங்கக் குறிப்புகள் | 54 |
| 11. | வர்த்தமானக் குறிப்புகள் | 56 |

## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| அங்கத்தினர் அல்லாதவருக்குச் சந்தா | ரூ. | 2—0—0 |
| அயல் நாடுகளுக்கு | ரூ. | 2—8—0 |

குறிப்பு:—

விபரம் எழுதுவோர்கள் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதி அனுப்பவேண்டும். விஷயங்களுக்கு விபரதாரர்களே பொறுப்புதாரி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 JUL 1928
MADRAS
169

# "ஏல விவசாயி"

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து
வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகை.

ஒன்று பட்டாலுண்டே வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?

(பாரதியார்)

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.

| மலர் 2 | உத்தமபாளையம். பிரபவ ௵ சித்திரை ௴<br>1923 ௵ ஏப்ரல்—மே ௴ | இதழ் 1 |
|---|---|---|

## கடவுள் வணக்கம்.

"மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி.
எண்பிறக் கொழிய இறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்கும் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்னடி
வணங்குதல் அல்லது வாழ்த்தல் என்னாவிற்கு
அடங்காது"

மணிமேகலை.

15961

# வாழ்த்துப் பாக்கள்

## (ஏல விவசாயிக்கு)

ஐவகை வாசங்கட்கும் அரசதாய் விளங்கும் ஏலம்
செய்வகை முறைகளோதித் திகழ்விவ சாயிதானும்
பெய்தரும் பெயருக் கேற்பப் பிறபல புதினத்தாள்கட்
கெய்தரும் சிறப்பினோடு மிசைமணம் கமழ்வதாமே.

---

மதிமுடி தரித்த வானவன் மதிதன்
துதிபெறுமரபிற் றோன்றிய தடாதகை
திலகவா ணுதலொடுஞ் செய்யகோல் தாங்கி
ஆண்டா சளித்த வருந்தவம் வாய்ந்த
பாண்டி நன்னாடு பற்றிய பதியாய்

நாவா ரப்புகழ் நாட்டிதற் கினிய
தேவா ரப்பதி வந்தவன் தேவர்க்
கன்றுடை யளித்த வருந்தவன் மரபில்
இன்றுமப் பணியே யேற்றிடும் குறிப்போன்
இந்தியத் தாயின் இணையிலா மானம்

சிந்திடா வண்ணம் செய்கதர் வளர்க்கும்
காந்திமா தவனார் கட்டளை வழாமல்
ஏந்தினோன் தேச விடுதலை யெனப்
பாரா யணம்புரி நாரா யணப்பெயர்
தாங்கிய வறிஞன் தக்கவா றாய்ந்து



ஓங்கிய விவசா யத்தின துயர்வைப்
பொதுமையா வெவரும் புந்தியோர்ந் திடவும்
இதமா முறைபல் வேந்தவும் சிறப்பாய்
பல்வளங் கொழிக்கு மெல்லையாய்த் தரும்
மல்கிய வாட்சி யென்றுமா நிலத்தோர்

போற்றிடு மலைவளர் நாட்டினிற் பொலியும்
பொருவிதா யொன்றைப் புகலரும் புண்ணியத்
திருவிதாங் கூரினர் சிந்தைகூர் ஏல
விவசா யிப்பெயர் விளங்கிடச் சூட்டி
எவரெவர் மனத்தையும் கவர்தரும் கட்டுரை

பற்பல வரைந்து பாரத நாட்டினர்
விற்பன ராகி விழிப்புற மாதம்
ஓர்முறை யாக வுதவிடும் தாள்கள்
ஏர்முறை மறையெலா மினிதெடுத் தியம்பும்
அருமையை யெவ்வுரை யாலளந் திடலாம்

பெருமையார் வாசம் பேணிய பொருள்களில்
ஏலமே தலைமை யெய்திய வாறு
ஞாலமே யுலவு தாள்களுள் இதுவே
சீரிய மணமொடும் செவ்விய பொருளொடும்
நேரிய முறையொடும் நிமிர்தரு கின்ற
மேதையா லதனை வேணவா வுடனே
ஏற்றினி துணர்வினு லாய்ந்து
போற்றுதல் கடனே போற்றுதல் கடனே.

பண்டிதை–அசலாம்பிகையம்மாள்.

---

## ஆசிரியம்.

திருவான மங்கைவாழ்த் திடவாக்கி வதிநலால்
திருவாங்கூ ரென்பதான
திகழ்வான நன்னாட்டி னேலவிவ சாயிகள்
சிறப்பான சுலமடையவும்
தருவான தைப்போன்று தருவாலெனைக் கேட்ப
தான தெல்லாம் புவியில் வாழ்
சனமான தடையவும் தமிழான மூதுமொழி
தழைப்பான தைமெய்க்கவும்
இருவான மழைபொழில திண்மான உயர்வான
இதமான நன்னிதியை
இனிவான சொற்பொலிவி லெனிதான நன்னடையில்
ஏரான பாவே தெழுதி
வருவானடத் "தேல விவசாயி" யிவணிரு
வபதான புதிதான விவ்
வருஷத்தும் நன்மைகளை வருவித்து வந்திலிது
வாழி நீடூழி வாழி.

## வேறு

தங்கத் தழைவு மிதனோடத் தகவென் றிவற்றினை நலம்பெற்
றெங்கும் புகழ்சேர் திருவாங்கூ ரேலவிவ சாயிகள் தலைமைச்
சங்கந் தழைக்கத் தினந்தழைக்கச் சனமபிமானி நாயகந் தழைக்க
அங்கந் தழைக்க வதிற்சேரு மபிமானிகளுந் தழைத்திடவே.

விபிக்கு மமுத வசனமய மேவுமுரையா விகளியலங்
கரிக்குமுயர்வி ஷயதானக் கர்த்தர் வாழ்க வவ்வுரைபா
தரிக்குமறிஞர் வாழ்க விதைத் தக்கபடித்தை தன்னிலநு
சரிக்கு மேலோர் தாம்வாழ்க சர்வத்திரரும வாழ்குகவே.

## வேறு

பாக்கியம் வற்றுறாதிப் பத்திரா திரியன்றிசி
லாக்கியம் விற்றுப்புண்ய லாபமுற் றுயுனோடர்
சேக்கியம் பெற்றுசற்று யோகமுஞ் சுற்றுமற்று
யோக்கியம் பற்றுமின்பம பொருந்திவாழ்ந் திடுகவன்றே.

M S. சுந்தரம்.



1. திருவளரக் கலைவளர உலகமெலாஞ்
சிறப்பாற் போற்ற
அருள்வளர அறம்வளரப் பிறவளமு
நிறைவெய்த வறுமைசான்ற
பெருமைசெறி சுதந்திரவாழ் வினிதோங்க
வளிக்கவல பெற்றியாலே
தருநிகர விவசாயத் தனித்தொழிலே
முதற்றொழிலாய்த் தயங்குமாதோ.

2. இத்தகைய விவசாயக் கனித்தொழிலி
னெறுநபகுப்பா யிலங்குமேல
வித்தகநிம் விவசாயத் தொழிலதனுஞ்
மேனிலையை யடைவோமென்னும்
புத்துணர்விற் பொலிக்கவராக் தாளாளர்
தமிழ்பலரு மொருங்குகூடி
தத்துபுக ழேலவிவ சாயச் சங்க
மதைத் தாபித்தாரே.

3. சங்கநெறி கண்கொண்டே காயிபற்றுந்
தொழில்பலவுஞ் சால்மினோக்கித்
தங்கமுற வேலவிவ சாயிபெனும்
பெயராற் றுலங்குமென்னை
தங்குதமிழ் மாசிகையொன் றினிதாக்கித்
தமதுபுகழ் தழைத்தமேல்கி
பெங்கு முறவுழைக்கின்ற விவர்பெருமை
யாவரே யியம்ப வல்லார்.

4. நாடுயரக் குலமுயரக் குடியுயர
வுழைக்கின்றார் நலந்தான்மிக்கார்
பிடுகெழு மிசைசான்ற யின்னோர்தாமும்
பிறங்குசீலத்
தோடுதிகழ் மாசிகையு மென்றாளு
மினிதாக வெளிபெற் றோங்கி
நீடிலகிற் புகழ்மிசிப் பல்லூழி
நிலை பெற்றே வாழிவாழி.

பண்டிதை-பத்மாசனி அம்மாள்.

# இரண்டாவது ஆண்டு

நினைத்தார்க்கு நினைக்கவொண்ணா நினைத்தபடி யளிக்கும் நிமலனது அருளினால், நமது ஏல 'விவசாயி"ப் பத்திரிகைக்கு முதலாவது வருஷம் இனிது நடந்து, இத்துடன் இரண்டாவது ஆண்டு ஆரம்பம் ஆகிறது. இப் பத்திரிகை அளவில் சிறியதாயிருப்பினும், வெளியீட்டில் மாசிகையாயிருப்பினும், வயதில் ஒரு ஆண்டே ஆகியிருப்பினும், உரிமையில் ஒரு சங்கத்திற்கே உகந்ததாயிருப்பினும் இதன் சரித்திரம் பெரிது. இதன் அன்பான அங்கத்தினர்கள் அனைவருக்கும் அறிவிக்கவேண்டியது எனது கடமையாயிருக்கிறபடியால், கூடிய சீக்கிரத்தில் இப்பத்திரிகையின் சரித்திரம் வெளியிடப்படும். இதன் சரிதை நமது சங்கத்தின் சரித்திரமேயாகும்.

பத்திரிகையொன்று சங்க சார்பில் நடத்தவேண்டுமென 4 வருடங்களுக்கு முன்பு பொதுக்கூட்டம் ஒன்றில் தீர்மானமாகியும் சென்ற ஆண்டுவரையில் கவனிக்கப்படவில்லை. கோம்பை, தேவாரம் கிளைச்சங்கத்தார்கள் ஒன்றுகூடிப் பத்திரிகையின் அருமையையும் ஆற்றலையும் ஆழ்ந்து ஆராய்ந்து, அதன் அவசியத்தையும் அவசரத்தையும் அதிகமாக அறிந்து, சங்கத்தின் ஆதரவில் பத்திரிகையொன்று நடத்துமாறு அன்புடன் அனுமதி அளித்தார்கள். அதன் பயனாகத் தோன்றியதுதான் இம்மாசிகை.

விவசாயத்தில் ஒரு பிரிவாகிய மலை விவசாயத்தில், அதுவும் அதில் ஒரு பகுதியான ஏலக்கிருஷியைப்பற்றித் தனிப்பத்திரிகை



நடத்துவது எவ்வளவு கஷ்டமென்று சொல்லத் தேவையில்லை. உலகில் எங்கேனும் வேறு எப்பாஷையிலேனும் ஏல விவசாயத்திற்கென ஒரு பத்திரிகை இன்றுவரை கிடையாது. ஏல விவசாயிகளுக்காகவும் ஏல விவசாயத்திற்காகவும் ஒரு பத்திரிகை நடத்தும் தனிப்பெருங் கௌரவம் நமது சங்கத்திற்கே உரியது என்று பெருமை கொள்வோமாக.

நமது ஏல விவசாயிகளில் ஏலக் கிருஷியைப்பற்றி ஏல விவசாயிப் பத்திரிகையில் போதிய வியாசங்கள் எழுதுவது கிடையாது. வியாசங்கள் எழுதக்கூடியவர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு அதிக அனுபவமில்லை. ஏலக் கிருஷியில் அனுபவமுள்ளவர்கள் அநேகர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு வியாசம் எழுதுவதில் பயிற்சி கிடையாது. ஏதோ சிலர் இருக்கிறார்கள்; அவர்களுக்கும் அதிக அவகாசம் கிடைப்பதில்லை. இது இப்படியிருக்க, வியாசம் எழுதத் தெரிந்த எனது அயலூர் நேசர்களில் சிலர் "விவசாயம் என்று கேள்விப்பட்டிருக்கிறோம்; ஏல விவசாயம் என்றால் என்ன" என்று எழுதி என்னை வினவியிருக்கிறார்கள். தத்தம் அனுபவத்தில் நூதனமாகக் கண்டறிந்தவைகளை ஒவ்வொரு ஏலக் கிருஷிகரையும் ஏல விவசாயிக்கு எழுதியனுப்புமாறு வேண்டுகிறேன்.

நமது பத்திரிகையில் சங்கத்தின் ஒற்றுமைக்குரிய விஷயங்கள், ஏலக் கிருஷி சம்பந்தமான விஷயங்களன்றியும், இது விவசாயப் பத்திரிகையாயும் விவசாயிகள் பத்திரிகையாயுமிருப்பதால், ஏலக் கிருஷிகர்களின் நன்மைக்குரிய விஷயங்கள் அனைத்தும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவ்வாண்டில் ஏலக் கிருஷியைப்பற்றி நவீன ஆராய்ச்சிகள் செய்யப்படும். ஏலச் செடிகளுக்கு ஏற்பட்டுள்ள வியாதிகளைப் போக்கும் பொருட்டு பலவழிகளில் முயலப்படும். நீலகிரி, வயல்நாடு, சேர்வராயமலை, மைசூர், குடகு, இலங்கை முதலியவிடங்களுக்குச் சென்று அங்கு ஏலக் கிருஷி விஷயங்களை அறிந்து அவைகளை அறிவிக்கப்படும்.

மிளகு, ஜாதிக்காய், கிராம்பு போன்றவைகளை ஏலக் கிருஷியுடன் உபகிருஷியாகப் பயிர் செய்யும்பொருட்டு இவ்வாண்டில விஷயங்கள் தெரிவிக்கப்படும். நமது சங்கத்திற்கு வேண்டிய சகல வழிகளிலும் நமது பத்திரிகை உழைக்கும். அச்சு வசதிகள் அனைத்தும் அமைந்தவுடன் தமிழகத்தில் விவசாயிகள் உலகத்தில் இது உயர்ந்த பத்திரிகையாக வெளிவரும்.

“ஏல விவசாயி”யை அன்புடன் ஆதரித்து வருகிற அங்கத்தினர் அனைவருக்கும் அநேக வந்தனங்கள் அளிக்கிறேன். பத்திரிகையின் வளர்ச்சியில உண்மையோடு உழைத்த, உழைக்கும் உத்தமர்களுக்கெல்லாம் வந்தனங்கள். கட்டுரை எழுதி உதவும் நண்பர்களுக்கெல்லாம் வந்தனங்கள்.

பத்திரிகை விஷயத்தில் உற்சாகிக்கும் பெரியோர்களுக்கெல்லாம் வந்தனங்கள்.



## தமிழ் புது வருடம்

முதன்மையாகத் திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்தின் அங்கத்தினர் அனைவருக்கும், பொதுவாக ஏல விவசாயிகள் எல்லோருக்கும் இப்புது ஆண்டில் நல்வாழ்வு கூறுகிறேன். அபி வியாசகாரிகளுக்கும் அவ்வாறே. இப்புது வருஷம் சாதாரண வருஷமல்ல. அறுபது ஆண்டுகள் கழிந்து முதலாவது வருஷப் பட்டியல் சென்று, இரண்டாவது பிறக்கும் வருஷம் இதுவே. இப்புது ஆண்டில் ஜீவகாருண்யமே உருவெடுத்தது போன்று அவதரித்த புத்த பிரான், பாவிகளையும் பகைக்காது சகோதரராக நேசிக்க வேண்டுமென்று போதித்து அன்பு மதத்தை ஸ்தாபித்த கிறிஸ்துநாதர், அநாதிகளையும் சேர்த்திருந்த அரேபியாவில் அவதாரம் செய்து, வைராக்கியம் போதிக்கும் இஸ்லாம் மார்க்கத்தைத் தோற்றுவித்த முகம்மது நபி நாயகம், பக்தியை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்ட இந்து சமயத்தின் பெரியோர்கள் முதலியவர்கள் அருமைத் திரு உபதேசங்கள் நம் மனதில் பதிய வேண்டும். இந்த அறிவோர்களின் அரிய, பெரிய சிந்தனை நமது மனமாகிய வீணையில் இடைவிடாது ஒலித்து, நமது நரம்புகளின் வழியே சென்று இரத்தத்திலும் ஆவேசம் பாய வேண்டும். நம்மிடம் உயர்ந்த எண்ணங்கள் உதிக்க வேண்டும். நாமும் உயர்ந்த செய்கைகளைச் செய்ய வேண்டும்.

கடந்த வருஷத்தில் குறுகிய நோக்கத்தாலும், விதிகளின்படி செல்லாததாலும், பொறுப்பின்மையாலும், பிடிவாதத்தாலும் நமது சங்கத்தில் பகைகளும், போராட்டங்களும், வேற்றுமைகளும் உண்டாயின என்று வருந்தி வருந்தி, வருத்தத்துடன் தெரிவிக்காமலிருக்க முடியவில்லை. ஒற்றுமையுடனும், அன்பத்துடனும் வேலை செய்திருந்தால், எல்லா வேலைகளையும் சாதித்திருக்கலாம். ஏழை ஏல விவ

சங்கடத்தின் சக்தியால் எழும்பி, இப்போதையாகவே உறுதியாய் அமைப்பு பெற்ற நமது சங்கம்—திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் எவ்வித எதிர்ப்புகளையும் எதிர்க்காமல் தாங்கி-நின்று கொண்டிருக்கிறது. இதே உற்சாகத்துடன் சங்கம் சரியாக இவ்வளவுதான் வேலை செய்திருக்க முடியும். எப்படியோ கடவுள் அருள் நம் சங்கத்திற்குக் கிடைத்திருக்கிறது. மாலுமியற்ற மரக்கலம் போன்று அலைப்பட்டு, தவிக்கவிடாது நமது சங்கத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறவர்கள் நமது சங்கத்திற்குக் கிடைத்தற்கரிய உயரிய தலைவர் போடிநாயக்கனூர் ஜமீன்தார் மேன்மை வாய்ந்த T. V. K. காமராஜ பாண்டியரவர்கள் என்று சொல்லத் தேவையில்லை. சென்ற பொதுக்கூட்டத்தில் மதுரை விசேஷக் கூட்டத்தில் இவர் இல்லாவிடில் நமது சங்கம் என்னவாயிருக்கும்? சங்கத்திற்கு அஸ்திவாரம் போட்டு இப்பக்கங்களில் ஒவ்வொரு வரியும் ஆதி முதற்கொண்டு பாடுபட்ட, பாடுபடும் பெரியோர்கள், சங்கத்தின் அருமையை ஆற்றலை அறிந்த அறிஞர்கள், ஊக்கமும் உறுதியும் கொண்ட உண்மை உழைப்பாளிகள் முதலியவர்களின் முயற்சியால் சங்கம் இந்த ஸ்திதியிலேனும் இருக்கிறது. கடவுள் ஒன்றே, உலகம் ஒன்றே என்று பல அறிஞர்கள் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்கள். ஆராய்ந்து பார்க்குங்கால், பகைவர் யார்? நண்பர் யார்? இன்று நண்பராயிருந்தவர் நாளைக்குப் பகைவர் ஆனாலும் ஆகலாம்; இன்று பகைவராயிருந்தவர் நாளைக்கு நண்பர் ஆகவும் கூடும். இனித்தவைகள் கசப்பதுவுமுண்டு; கசந்தவைகள் இனிப்பதுவுமுண்டு. ஆகையால் இவ் வாசகத்தை நினைத்து நினைத்துப் பார்ப்பீர்களாக. "பகைவனையும் அன்பால் வெல்லுக" என்ற சாக்கிய முனிவரது மணி வாசகம் உங்கள் அகத்தில் இடம் பெறட்டும்.

நமது பழைய துன்பங்களைப் பழைய துக்கங்களைப் பழைய சிறுமைகளை அகற்றி, இப்புது ஆண்டில் புதிய ஊக்கத்தைப் புதிய உற்சாகத்தைப் புதிய நன்மைகளைப் புதிய நிலைமைகளைப் புதிய வெற்றிகளை அடைவோமாக. நமது பழைய கோபங்களைப்



பழைய குரோதங்களைப் பழைய பகைமைகளைப் பழைய வீண் சில்லரை மனஸ்தாபங்களைப் பழைய பல குறுகிய நோக்கங்களைப் பழைய பல பயனற்றவைகளை ஒழித்துப், புதிய புதிய வாழ்வைப் பெறுவோமாக. பழைய பகைவர்களை அன்பால் புதிய நண்பர்களாகச் செய்வோமாக. பழைய அறியாமைகளைப் பழைய அதர்மங்களைப் பழைய அச்சங்களைப் பழைய அபிப்ராயங்களை அறவே அகற்றி, புதிய அறிவைப் புதிய ஞானத்தைப் புதிய தர்மத்தை அடைந்து வாழ்வோமாக.

நமது சங்கத்தில் வேற்றுமையை நீக்கி, ஒற்றுமையை வளர்த்துத், தளர்ச்சியைப் போக்கி, உறுதியையும் உற்சாகத்தையும் உண்டாக்கி, சுயநலப் பெருமையை மடக்கி, அடக்கி, அகப்படுத்தி, நமது சங்கத்தைச் சுதந்திரத்தால் நமது கண்ணெனக் காத்து வளர்ப்போமாக. நமது திருவாங்கூர் ஏலவிவசாயிகள் சங்கமானது நமக்குக் காமதேனுவாகவும் கற்பக விருக்ஷமாகவும் இருக்கிறபடியால், எல்லாம் வல்ல இறைவன் இதற்கு எல்லா நலன்களையும் என்றும் எவ்விடத்தும் தந்தருளுமாறு பிரார்த்திப்போமாக.

அன்பும், அறிவும் நாட்டிலே பெருகிப் பெருகிப் பொங்குமாறு சர்வ வல்லமையுள்ள கடவுளைப் பிரார்த்திப்போமாக.

இந்தியா வாழ்க. இந்தியர் வாழ்க.
தமிழ் நாடு வாழ்க. தமிழர் வாழ்க, தமிழ் வாழ்க.
ஏல விவசாயிகள் வாழ்க. திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் வாழ்க. அதன் கிளைகளும் வாழ்க. சங்கத்தின் அங்கத்தினர்களும் வாழ்க.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

## கிராமப் பிரசாரம்

நமது இந்திய மக்களில் பெரும்பாலோர் கிராமங்களிலேயே வசிக்கிறார்கள். முற்காலத்தில் நமது நாட்டில் ஏற்பட்டிருந்த கிராமங்களின் அமைப்பும், ஒழுங்கும், சீர்மையும், நாகரிகமும் மிகப் பெருமை வாய்ந்திருந்த தென்பதைச் சரித்திரக்காரர்கள் எல்லோரும் புகழ்ந்து கூறுகிறார்கள். அத்தகைய நமது இந்திய கிராம வாழ்க்கைச் சிதைவுற்ற காரணத்தாலேயே நம நாடு மிகவும் வீழ்ச்சியுற்ற தென்பதைச் சிறிது சிந்தித்துப் பார்த்தால் நன்கு விளங்கும். மக்களுடைய வாழ்க்கை, தொழில், ஒழுக்கம், நீதி, கல்வி, அரசியல், பொது அறிவு முதலியவனைத்தும் கிராம அமைப்பின் கீழ் முன்னர் வளம்பெற்று வளர்ந்து வந்தன. ஒவ்வொரு கிராமமும் அக்காலத்தில் சுதந்திரம் பெற்ற ஒரு தனி யரசாங்கமாக நடைபெற்று வந்ததென்பதையும், இக்காலத்தைப் போல் அதிகாரத்தாலன்றி அன்பாலேயே கிராமங்கள் ஒன்றுக்கொன்று பிணைப்புற்று வாழ்ந்து வந்தன வென்பதையும், ஒரு கிராமத்திய மக்கள் அயல் கிராமத்தாரின் உதவியைப் பெரும்பாலும் எதிர்பார்க்காமலேயே தம் வாழ்க்கையை நடத்திக்கொண்டுபோகும் ஆற்றலுடையவரா யிருந்தாரென்பதையும் எண்ணிப் பார்க்குமிடத்து நமக்குண்டாகும் சந்தோஷத்திற்களவில்லை. அத்தகைய சீரிய இந்திய வாழ்க்கை, பல காரணங்களால் இற்றைக்குச் சீருஞ் சிறப்புங் குன்றிப் பின்னடைந்து தடுமாறி நிற்கிறது.



நமது நாடு ஒரு விவசாய நாடாதல் பற்றிப் பெரும்பாலான ஜனங்கள் விவசாயத்தைச் செய்துகொண்டு கிராமங்களிலேயே வாழ்ந்து வருகிறார்கள். பெரும்பாலாரான அம் மக்கள் நன்னிலையை யடைந்தாலன்றி நம் நாடு நன்னிலையை யடையமுடியாதென்பது நிச்சயம். தற்போது ஒரு கிராமத்தின் மக்களுக்கு வாழ்க்கைக்கு வேண்டிய உப்பு முதல் உடை வரையிலும் (சிறுபான்மை தானியம் நீங்கலாக) எல்லாப் பொருள்களும் துரைத்தனத்தாரின் தயவினால் அந்நிய இடங்களிலிருந்தே வரவேண்டியிருக்கின்றன. கிராமத்தில் ஒரு சிறு வழக்கு நேருமாயின் அதைத் தீர்த்து வைக்கக் கிராமப் பஞ்சாயத்தாராகிய பெரியோர்களில்லை. குடிகள் பெரும்பணத்தைக் கொட்டிக் கொடுத்துப் பணமொன்றே குறியாகக் கொண்ட வக்கீல்களின் வாசல்களிலும், தம் பாஷை யறியாத நீதிபதிகளின் கோர்ட்டு வாசல்களிலும் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

இக்காலை கிராமக் குடிகளிடையில் கல்வியறிவும், பிரபஞ்ச ஞானமுங் குன்றியிருக்கின்றன. கிராமத்தார் தங்குழந்தைகளுக்குத் தக்க கல்வி கற்பிக்கவும் கிராமத்தில் போதிய வசதிகளில்லை. கிராமப் பாடசாலைகள் சில ஆங்காங் கேற்பட்டுள்ளனவாயினும், முற்காலத்தைப்போல் அவற்றில் சிறந்த பண்டிதர்களான உபாத்தியாயர்கள் கிடையாது. தமிழகத்தில் ஆரம்பப் பாடசாலைகளின் ஆசிரியர்களில் நூற்றுக்கு எண்பது பேருக்கு மேல், தம் சுய பாஷையிலும் பிழையின்றி எழுதப் படிக்கத் தெரிந்தவர்களல்லவென்று கூறுவதற்கு அஞ்ச வேண்டியதில்லை. இத்தகைய உபாத்தியாயர்களிடத்தில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு எத்துணைக் கல்வியும் உலகியலறிவும் ஏற்படுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இந்நிலையில், பொதுவாகத் தற்போது பாடசாலையில் கற்பிக்கப்படுங் கல்வியோவெனில் நாட்டுக்கும், நம் சமயத்திற்கும், குடிகளின் தொழிலுக்கும், அவர் தம் இயல்புக்கும் பயன்படாத கல்வியாக விருக்கிறது. நம் நாட்டில் கட்டாய ஆரம்ப இலவசக் கல்விமுறை ஏற்பட்டால் பெருநன்மை

விளையுமென்று பலர் நம்புகின்றனர். தற்காலக் கல்வி முறையும், பாடசாலைகளின் நிர்வாக—அதிகார வர்க்கமும் முற்றும் நாட்டிற்கேற்ற பண்டைய முறையைத் தழுவி மாறப்பட்டாலன்றி கட்டாயக் கல்வியால் கிராம வாசிகளுக்கு எதிர்பார்க்கிறபடி போதிய பலனுண்டாகாதென்பதை வற்புறுத்துகிறோம். நமது கிராமங்களில் தற்போது சுகாதாரக் கேடான பல குறைகள் தென்படுகின்றன. அவற்றை நீக்குவதற்கேற்ற அறிவு குடிகளுக்கில்லை. கல்வியறிவில்லாத காரணத்தாலும், சுயநல மிக்க சிலரது துர்ப்போதனையாலும் கிராமக் குடிகளுக்கிடையில் பலவித மூடநம்பிக்கைகள் தோன்றி வேரூன்றிப் பரவி அவர்களைக் கெடுத்து வருகின்றன. இத்தகைய கிராமக் குடிகளிடத்திலிருந்தே இந்திய துரைத்தனத்தாரின் வருமானத்தில் பெரும் பகுதி வசூலிக்கப் படுகிறது. அத் துரைத்தனத்தாரால நகரப் புறங்களில் நிறுவப் பெற்றுள்ள பெருங் கலாசாலைகளும், வைத்தியசாலைகளும், பிறவும் பெரும் பகுதியோரான கிராமக் குடிகளுக்குச் சிறிதும் பயன்படுவதில்லை; நகரப் புறங்களிலுள்ள ஒரு சிறு பகுதியினருக்கே அவை பயன் படுகின்றன.

தற்காலத்திய கிராமநிலை எங்ஙனமிருக்கிறது? கிராமத்திற்குச் செல்லுவதற்கேற்ற பாதைகள் கிடையாது. ஒற்றையடிப் பாதைகளில் முட்கள், புதர்கள் இவற்றினிடையே நுழைந்து செல்லவேண்டும். ஊரைச் சுற்றிலும் பலவித அசுத்தங்களும், குப்பை மேடுகளுங் குவிந்து காணப்படும். கிராமத்தினுட் புகுந்தால் சரியான தெருக்கள் கிடையாது. சந்துகளிலும், பொந்துகளிலுமாக எலிவளைகளைப்போல் வீடுகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. தெருக்களில் மல ஜலக் குப்பைகளுக்கு வறுமை கிடையாது. குடியிருப்பாரின்றிப் பாழடைந்த வீடுகளும், காலியான நிலங்களும், குட்டிச் சுவர்களும் பல காணப்படுகின்றன. இவற்றினிடையில் முட்களும், புதர்களும், கற்றாழைப் பூண்டுகளும் இடத்தைக் காலியில்லாமல் செய்ப மூடியும். காற்று நுழைவதற்கில்லாதபடி வெறும் [illegible] அமைக்கப் பெற்ற வீடு



களில் மெலிந்த முகமும், வற்றிய உடலும், சுருங்கிய தோலும், குழிந்த கண்களுமாகக் கிழிந்த—நீரில் நனைத்துப் பிழிந்து பல நாளான இழிந்த ஆடைகளுடன் மக்கள் மிரண்ட பார்வையுடன் காணப்படுகின்றனர்! அவர்களுக்கு இவ்வுலகம் எப்படியிருக்குமென்று எண்ணிப் பார்க்கும் எண்ணந் தோன்றவுங் காரணமில்லை. வெள்ளைத் துயிலுடுத்தி, மேற்சட்டையுமிட்டுத் தோன்றிய நம்மைக் கண்டதும் பயந்து பதுங்குவார் பலர். இரண்டொருவர் துணிந்து நெருங்கியவுடன் பலபேர் கூட்டங்கூடி நமது கோலத்தை வேடிக்கைப் பார்க்கக் கோரிச் சூழுவர். கோர்ட்டு ஏறிப் பழகிய ஒரு சிலருள்ள ஊர்களில் கக்ஷிப் பிரதி கக்ஷிகளுக்குட் அதனால் விளையும் பயன்களுக்கும் அளவில்லை. ஊரெங்கும் வேலையின்மையும், சோம்பலும், வறுமையுங் குடிகொண்டிருப்பதால் பலபேர் பிழைக்க வழியின்றி—சிலோன், மலாய் முதலிய அயல் நாடுகளை நாடி அகல்கின்றனர். ஊரில் சுகாதார வசதியின்மையால் தோன்றிய பலவகைக் கொள்ளை நோய்களால் தாக்குண்டு வருந்தும் மக்கள், அந்நோய்களுக்குத் துஷ்ட தெய்வங்களை காரணமெனக் கொண்டு அவற்றைத் தொழு முகத்தால் பலியிடல் முதலிய அசுத்தங்களைச் செய்து மேன்மேலும் அந்நோய்களை வளர்த்து வருந்த மடைகின்றனர். இவ்விதம் உலகியலறியாத பேதைகளாக இந்திய கிராமவாசிகள் பெரிதும் இருந்து வருகின்றனர்.

இந் நிலையில் நாம் இந்தியாவுக்கு ஜனப் பொறுப்பாட்சி வேண்டுமென்று விரும்பி முயற்சி செய்கிறோம். அவ் வாட்சியை நேர்மையுற ஓட்டுகளைக் கொடுத்துப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்பி நடத்த வேண்டியவர்கள் பெரும்பாலுங் கிராமக் குடிகளே யாவர். கிராம வாசிகள் அஞ்ஞானத்தில் மூழ்கியிருக்கும் வரையில் எத்தனை அரசியல் சீர் திருத்தங்கள் நமது நாட்டுக்கு வழங்கப் படினும்; அவை சுயநல மிக்க பணம் படைத்த—கல்வி கற்ற சிறு கூட்டத்தினரால் கவரப்பட்டு, நாட்டுக்குத் தீமை விளைவிக்கக் கூடுமென்பதைக் கவனிக்க வேண்டும். இதைக் குறித்தே, கிராமங்களைப் பற்றியும், ஏழைத் தொழிலாளர்களைப் பற்றியும் கவனிக்காமல் வக்கீல்கள், உயர்தர உத்தியோகஸ்தர்

ன் ஆகியவர்களின் கைகளில் நலிந்து விளையாடிக் கொண்டிருந்த காங்கிரசை, நமது ஏழைகளின் இரக்ஷகர்—மகாத்மா காந்தியடிகளார் ஏழை விவசாயிகளுடைய—தொழிலாளருடைய—பொது ஜனங்களினுடைய காங்கிரசாக மாற்றியமைத்தார். இன்றளவும் நமது காங்கிரஸ் மகாசபை கிராமங்களை நோக்க ஆரம்பித்தது? காங்கிரஸ் தொண்டர்கள், பலரும் பட்டணங்களுக்கும், அயல் நாடுகளுக்குஞ் சென்று, பெருமையுடன் பிரசாரம் செய்வதைவிட்டுக் கிராமங்களுக்குச் சென்று, ஏழை மக்களிடையில் நின்று, சாமானியமான சத்தருடையை யுடுத்து, உண்மையுடனும், தியாக புத்தியுடனும், கவுரவத்தைக் கருதாமல் சாந்தமாகப் பிரசாரம் செய்யத் தலைப்பட்டதன் காரணமென்ன? சகோதர சகோதரிகளே! மகாத்மாவின் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்திருங்கள். அவரது நிர்மாண திட்டங்களைத் தாம் சிறிது சிந்தித்துப் பார்ப்பவருக்கு நமது இந்திய கிராம வாழ்க்கையின் புனருத்தாரணத்திற்கேற்ற அரிய சாதனங்களென்பது நன்கு விளங்கும். தீண்டாமை விலக்கல், கதரை வளர்த்தல், மதுவை யொழித்தல், நீதிமன்றங்களை விடுத்தல் தற்காலக் கல்விமுறையை யகற்றல் முதலிய சீரிய நோக்கங்களை நம் நாடு எம்மட்டும் நிறைவேற்றுகின்றதோ அதற்குத் தக்கபடிதான் நமது நாட்டின் விடுதலையும் சமீபிக்குமென்பதை அறிய முடியுங்கள். காந்தியடிகளாரின் விருப்பத்தின்படி நாட்டில் ஆக்க வேலைகளும் இதுவரையும் தொடர்ந்து விடாது நடைபெற்று வந்திருப்பின் நமது கிராமங்கள் எவ்வளவோ சீர்திருத்தமடைந்திருக்கும். கிராமவாசிகள் தேசியக் கைத்தொழில்கள் பலவற்றைக் கைப்பற்றித் தம்மிடையே தோன்றியுள்ள வேலையின்மை, சோம்பல், வறுமை முதலியவற்றை முறையே யோட்டிப் பெருநன்மை பெய்தியிருப்பார்கள். ஆகவே தேசிய நலத்தில் நாட்டமுடையோர் யாவரும் நகரப் புறங்களில் படித்த கூட்டத்தாருக்கு நியாயங்களை எடுத்துக்கூறித் தருக்கித்துக் கொண்டிருப்பதை விடுத்துக் கிராமங்களுக்குச் சென்று ஏழைக் குடிகளுக்கிடையில் **வேலைசெய்ய வேண்டும்.**



தற்போது நம் கிராம வாசிகளுக்கு முதலாவது வேண்டியிருப்பது அறிவு வளர்ச்சியாம். தேச சரித்திரம், பூகோள சாஸ்திரம், சுகாதாரம், விவசாயம், தொழில், சமூகம், சமயம், அரசியல் முதலியவைகளைப் பற்றிய அறிவு கிராமக் குடிகளுக்கு அத்தியாவசியமாகும். இரண்டு மூன்று ஆண்டுகளாகக் காங்கிரஸ் செய்து வந்த கிராமப் பிரசாரத்தின் பயனாக அரசியலறிவு ஒரு சிறிது பல கிராமங்களில் பரவியிருக்கிறது. ஆயினும் மகாத்மாஜி யவர்களின் தலைமையினின்றும் விலகிய நாள் முதல் காங்கிரஸ் மகாநாடு கிராமப் பிரசாரத்தை மறந்தேபோய் விட்டதென்று கூறின் அஃது தவறாக மாட்டாது. ஆகவே தேசாபிமானம் பூண்ட படித்த வர்க்கத்தார் கிராம சீர்திருத்தத்தில் கவனம் வைத்து உழைக்க முற்பட வேண்டும். இதற்கெனத் தக்க இயக்கமும் காணப்படும்.

அமெரிக்காவில் பல சர்வ கலாசாலைகள் அந் நாட்டுக் கிராமங்களின் அபிவிருத்தியை முன்னிட்டு முனைந்து வேலைசெய்து வருகின்றன. சர்வ கலாசாலையைச் சார்ந்த ஆசிரியர்களும் மாணவர்களும் அவ்வப்போது சுற்றுப் பக்கங்களிலுள்ள கிராமங்களுக்குச் சென்று கிராம வாசிகளுக்கு விவசாயம், வர்த்தகம், தொழில், விஞ்ஞான சாத்திரம் முதலிய விஷயங்களைப் பற்றிய சாஸ்திரிய அறிவை உபந்நியாசங்களின் வாயிலாகவும், நாடகங்களின் வாயிலாகவும், படக் காக்ஷிகளின் வாயிலாகவும் ஊட்டி வருகின்றனர். அம் முயற்சியின் பயனாக இதுகாலை அந் நாட்டில் எவ்வளவோ சீர் திருத்தங்கள் ஏற்பட்டுள்ளன. தற் காலத்தில் அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள கிராம நிர்மாண முறைகளின் சேர்மையைப் பற்றித் தனி வியாசமாக மற்றொரு சமயம் எழுதுவோம்.

நமது நாட்டுக் கிராமங்களும் புனருத்தாரணம் அடைய வேண்டுமாயின் நாமும் அமெரிக்கரைப் பின்பற்றி வேலைசெய்ய

வேண்டும். நமது நகரப்புறங்களில் ஏற்பட்டுள்ள உயர்தரப் பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் ஆசிரியர்களும் மாணவர்களுங் கூடிய கழகங்கள் (சங்கங்கள்) ஏற்படவேண்டும். அவற்றில் கலாசாலையிற் சம்பந்தமில்லாதவராயினும் கல்வியபிமானமுள்ள பிறரும் உறுப்பினர்களாகலாம். அக்கழகங்கள் தத்தம் நிலைமைக்கேற்றபடி சிற்சில பிரிவுகளாகப் பிரிந்து தக்க ஆசிரியர் ஒருவர் அல்லது சிலரது மேற்பார்வையின் கீழ் வேலை தொடங்க வேண்டும். கலாசாலைகளுக்கு விடுமுறை நாட்கள் வரும்பொழுதெல்லாம் இச்சங்கத்தார் தம் நகரங்களுக்குச் சுற்றுப் புறங்களிலுள்ள கிராமங்களுக்கு முறையே சென்று கிராமத்தாரைக் கூட்டுவித்து அவர்களுக்கு உபந்நியாசங்கள் மூலமாகவும், நாடகத் துறையில் நடித்துக் காட்டுவதன் மூலமாகவும், கூடுமாயின் படக் காட்சிகளின் மூலமாகவும், கதா காலக்ஷேபங்களின் மூலமாகவும் ககோள பூகோள சாஸ்திரங்களைப் பற்றியும், தேச சரித்திரம், இயற்கைப் பொருட் பாடம், சுகாதாரம், ஆரம்பத்தில் முதல் உதவி, விவசாயத்தில் புதிய முறைகள், தொழில் முறைகள், வர்த்தக வழிகள், கூட்டுறவு முயற்சி, சமய ஞானம், அரசியல் விதங்கள் முதலிய விஷயங்களைப் பற்றியும் அறிவு புகட்டவேண்டும். இவ்வழியே ஒவ்வொரு கிராமத்திலும் அங்குள்ள அறிவாளர் சிலரைக் கொண்டு ஒரு சபையை ஸ்தாபித்தும், அதன் மேல் புத்தகசாலை—வாசகசாலை இவற்றைக் காண்பதும், கிராமத்திலுள்ள ஆரம்பாசிரியர்களின் துணைகொண்டு சிறுவர் சிறுமியர்க்கேயன்றி பெரியோருக்கும் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பதும் நாளடைவில் சுலபமான காரியங்களாகும். இவ்வித முயற்சியால் கலாசாலை மாணவருக்கும் சொல்வன்மை, விஷய ஆராய்ச்சித்திறன், கிராம வாழ்க்கையின் அநுபவம், கிராமக் குடிகளின் நேசம், நாட்டுப்புற இயற்கை வனப்புக்களின் அநுபவம், தேச ஊழியத்தில் உற்சாகம், தாய்மொழிப் பற்று முதலிய பல நன்மைகள் ஏற்படும். அத்தகைய சங்கங்களுக்கு, அவற்றின் வேலைகளின் திறமையின் பலனுக்குத் தக்கபடி முனிசிபாலிடி, தாலுகா ஜில்லா போர்டுகள் முதலிய



ஸ்தல ஸ்தாபனங்களும் கூடிய உதவிகள் புரியலாம். இவ்வித கிராமப் பிரசாரத்தை மனதிலிருத்தி ஒரு திட்டம் தயாரிக்க ஆந்திர சர்வ கலாசாலையார் முயன்று வருகிறார்களெனக் கேள்விப்படுகிறோம். அதுபோல சென்னைக் கலாசாலையாரும், பிறரும் கிராமப் புனருத்தாரணத்தைக் கருதி வேண்டிய வழிகளை யோசிப்பார்களாயின் மிக நலமாயிருக்கும். எவ்விதமாயினும் இந்தியக் கிராம வாசிகளின் அறிவு பண்படுத்தப் படுமாயின், நாட்டைக் கவர்ந்துள்ள வறுமை, ஒற்றுமையின்மை, உற்சாகமின்மை, வேலையின்மை, மூடக் கொள்கைகள் முதலியன ஒழிந்து, நாட்டின் சுதந்திரக் கனி சாதிக்கப்பெறு மென்பதற் கையமிலை.

என். வெங்கடராமன்.

# விவசாயம்

உலகத்தில் பலவிதமான தொழில்கள் மலிந்துகிடக்கின்றன. உத்தியோகம் புருஷ லக்ஷணம் என்பதற்கேற்ப, உயர்ந்ததும் இழிவானதுமான பல தொழில்களில் மக்கள் பலர் அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு தொழிலை மேற்கொள்ளு முன்பு அத்தொழிலின் நன்மைகளை நன்கு கவனித்து உலகக்ஷேமத்திற்கும் மக்கள் வாழ்க்கைக்கும் உபயோக முள்ளதும், துணைபுரிவதுமான தொழிலை மேற்கொள்வதுதான் சிறந்தது. மக்கள் ஈடுபட வேண்டிய தொழில்களில் சிறந்ததும் தன்னலத்தைக்கொடுக்காது பிறர் நலத்துக்குத் துணைபுரியக்கூடியதுமான தொழில் எதுஎன்பதைப்பற்றி பண்டைய நாளிலிருந்து பல அறிஞர்கள் யோசித்து, முடிவாக விவசாயமே உத்தமமான தொழில் எனத் தீர்மானித்திருக்கிறார்கள். தமிழ் வேதமெனப் புகழப்பட்டுவரும் குறளில் விவசாயத்தைப்பற்றிப் புகழ்ந்துரைத்திருப்பதே இதற்குத் தக்க சான்றாகும்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்—குறள்.

மற்ற எல்லாத்தொழிலும் கைகட்டித் தொண்டு புரிவதென்கிறார். ஆனால் விவசாயத்திலோ அவ்வாறில்லை. விவசாயத் தொழிலில் புரிபவர்களுக்கு நன்மைகளிருப்பதுடன், உலக மக்களுக்கும் நன்மை உண்டு. உழுது பயிரிட்டு வந்த மாசூலாகிய உணவுப்பொருளை, பயிரிட்டவன் மாத்திரம் உண்பதில்லை. கிருஷிகன் உழைப்பால் பலர் உண்டு சுகப்படுகிறார்கள். இத்தொழிலை மேற்கொள்பவர்கள் மக்கள் சமூகத்திற்கேயன்றி, மிருக இனங்களுக்கும், புல் பூண்டுபோன்ற உணவுப்பொருள்களை உண்டாக்கி உதவி புரிந்து



வருகிறார்கள். விவசாயத் தொழில் மேற்கொண்டவர்கள் எப்போதும் மழையை-உலக க்ஷேமத்தைச்சதா எதிர்பார்த்த வண்ணமாயிருக்கிறார்கள். உதாரணமாக விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் கிராமவாசிகள் ஒருவருக்கொருவர் சந்தித்து க்ஷேமங்களை விசாரிக்கும்போது, “மழை உண்டா” என்றேகேட்டுக் கொள்கிறார்கள். இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தாராள சிந்தனையும், அன்பும், பரோபகார நினைவும் சகஜமாய்த்தோன்றுகிறது. அவர்களைப் பொறாமை முதலிய கெட்ட குணங்கள் அதிகமாய்ச் சேருகிறதில்லை. ஆனால் இக்காலத்தில் கிராம விவசாயிகள், நகர்வாசிகளுடனும், அதிலும் வக்கீல்களிடமும் நெருங்கிய பழக்கம் வைத்திருப்பதின் பயனாக, பலர் இத்தகைய கொடிய பழக்கங்கள் பெற்றுவிட்டார்கள். மேலும் விவசாயத் தொழிலில் நல்ல லாபம் கிடைப்பதுடன், அத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குச் செல்வத்தில் சிறந்த செல்வமாகிய ஆரோக்கிய தேகத்தைப் பெறுகிறார்கள். எப்போதும் திறந்த வெளியில் ஞாயிறு, காற்று முதலிய இயற்கைக் கடவுளரின் கருணையிலிருப்பதால், அவர்களுக்கு நல்ல ஆரோக்கியம் ஏற்படுகிறது. விவசாயத் தொழிலில் வரும் வரவைவிடப் பன்மடங்கு அதிகமாய் வருவாய் வரும்மற்றத் தொழில்களில் இத்தகைய வசதியில்லாதிருப்பது, வெள்ளிடைமலையாம். விவசாயம் இந்நாட்டில் மாத்திரம் அன்று, வேறு எந்த நாட்டிலாயினும், ஒரு நிலைபெற்ற தொழிலாகும். மன்னன் முதல் மற்றவர்களனைவரும், விவசாயிகளுடைய தயவிற்கு ஒரு நாள் எதிர்பார்க்க வேண்டியவர்களேயாகும். நூறு மைல் தூரத்தில் சுடும் பீரங்கிகளையும், தந்தியில்லாமல் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருப்பவர்களுடன் பேசுவது மாத்திரமன்றி, நேரிலும் பார்க்கக்கூடிய பலவித கருவிகளையும், இன்னும் மற்ற விசித்திரமான கருவிகளையும் கண்டு பிடிக்கலாம். ஆனால் இத்தகைய கருவிகளால், உலக க்ஷேமமடைய முடியாது. அதற்கு மாறுதலாகப் பல இன்னல்களுக்கு அது காரணமாயிருக்கிறது. இத்தனை விசித்திரங்கள் கண்டு பிடித்தவனும் முடிவில் விவசாயிகளுக்கு அடங்கியவனாகவே நிற்கிறான். ஆகவே விவசாயத்தின் பெருமையை என்னென்று உரைப்பது!

இத்தகைய பெருமை வாய்ந்த தொழிலில் ஈடுபட்ட விவசாயிகள் ஏன் இந்நாட்டில் முன்னடையவில்லை? என்ற ஐயம் சிலருக்குண்டாகலாம். இதற்கு காரணம் விவசாயிகளும், அரசாங்கமுமே யாகும். இக்காலத்தில் விவசாயிகள் இன்னும் பண்டைய காலமுறையையே கையாண்டு வருவதால்தான் தக்க மகசூலடையாது துன்புறுகிறார்கள். பயிரிடப் பயிரிட நாளுக்குநாள் நிலத்திலுள்ள சத்து கெட்டுவிடுகிறது. இதை ரசாயன முறைப்படியே சோதனைசெய்து, நீத்திருக்கும் சத்துக்களைச் சேர்த்து, மண்ணின் சத்துக்குத் தக்க பயிர்களைச் செய்தால நல்ல லாபம் வராமற் போக நியாயில்லை. இதைச் சிறிதும் கவனியாது, "தாதா செய்தார், நானும் பின்பற்றுகிறேன்" என்று ஏதோ இரண்டு காட்டுத் கழைகளைப் போட்டுப் பிரயாசைப் படுவதெல்லாம் வீண் பிரயாசையாகவே போய் விடுகிறது. விவசாயிகள் தக்க பயன் பெறவேண்டுமானால் இரசாயன முறைப்படி சாகுபடி செய்வதே நலமாகும். பாட்டனைப் பின் பற்றி விவசாயம் புரிபவர்கள் தக்க மகசூலைப் பெறாது, குடும்பச் செலவுக்கும் கடன் பட்டு முடிவில் அதற்கே அடிமையாகி விடுகிறார்கள்.

விவசாயிகள் நாசமடைந்து வருவதற்கு மற்றொரு காரணமாயிருப்பது இவர்களுக்குள் ஒற்றுமையும் நம்பிக்கையுமில்லாதிருப்பதே. மேல் நாட்டு விவசாயிகள் கையாண்டு வரும் ஐக்கிய சங்கங்கள் ஏற்படுத்தி, அம்முறையில தங்கள் மகசூல்களைப் பணமாக்கி வந்தார்களேயானால் இவர்களிடம் வறுமைப் பேய் எக்காலத்திலும் நெருங்க நியாயமேயிராது. இக்குறைகளை நீக்கி விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா சௌரியங்களையும் செய்து கொடுக்கக் கடமைப் பட்டிருக்கும் அரசாங்கம், அழுகிற குழந்தைகளுக்கு வாழைப்பழத்தைக் கொடுப்பதைப்போல், ஏதோ விவசாயத்திற்கென பாங்கிகளையும் சங்கங்களையும் மற்ற அதிகாரிகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்களே ஒழிய, அதனால் விவசாயிகளுக்கு யாதொரு பயனுமில்லை. லக்ஷக்கணக்கான ரூபாய்களை விழுங்கி ஏப்பம் விடுவதைத்தவிர வேறு எவ்வித உதவியுமில்லை. அரசாங்கத்தின் வருமானத்தில பாதித்தொகை கொடுத்துவரும் இவ்விவசாய இலாகாவிற்காக அரசாங்கம் என்ன செலவு செய்கிறதென்று யோசித்தால், ஒன்றுமேயில்லை. கிராம ஏரிகள், வாய்க்கால்கள் ரிப்பேர்



செய்யும் செலவுகளைக்கூடப் பட்டாகார்களிடமிருந்து ஒன்றுக்கு இரண்டாக வாங்கி விடுகிறது. விவசாயிகளுக்கு அரசாங்க உதவி எவ்விதத்திலுமே இல்லையென்றே உறுதியாகக் கூறலாம். நம் பிரதிநிதிகளும் தலைவர்களும், தேசத்தின் உயிர் நாடியாகிய இதில் தக்க முயற்சி எடுத்துக் கொள்ளாது, உத்தியோக வேட்டைக்கும், பட்டாடோபத்திற்கும் வீண் கூச்சல் போட்டு வருவது விசனிக்கத்தக்கதே யாகும்.

அரசாங்கம் க்ஷேமமாய் நிலை பெற வேண்டுமானால், நாட்டு மக்கள் சுக வாழ்வடைய வேண்டுமானால், உலக க்ஷேமமடைய வேண்டுமானால், இந்திய அரசாங்கம், உடனே இந்திய விவசாயிகளிடம் அனுதாபம் காட்டி, தக்க பணத்தையும் செலவிட்டு, தம் கடமையை முடிக்க வேண்டும். விவசாய உத்தியோகஸ்தர்களுக் கென்னும், யாதாஸ்துகளுக் கென்னும் செலவை நிறுத்தி, விவசாயிகளிடம் நேரில் நெருங்கி, அவர்களுக்கு ரசாயன முறையைப் புகட்டி விவசாயத்தை விருத்தி செய்தால் பெரும் பயனை அடையக்கூடும். ராணுவத்திற்கென்றும், உயர்தர உத்தியோகத்திற்கென்றும், கமிஷன்களுக்கென்றும் வீணாய்ச் செலவு செய்யும் பெருந்தொகையின் ஒருபாகத்தையேனும், விவசாயத்திற்குச் செலவிட்டிருந்தால் இன்று நாடு இவ்வளவு கேவலமாயிராது. நம் ஔவையார் திருவாய் மலர்ந்தபடி "வரப்புயர்ந்தால்" தான் அரசாங்கம் உயரும் என்பதை இந்திய அரசாங்கம் இனியேனும் உணர்ந்து இந்திய விவசாயத்திற்கு உதவி புரியுமாக.

முடிவில் விவசாயிகளுக்கு ஒரு வார்த்தை சொல்லாமலிருக்க முடியவில்லை. விவசாயத்தொழில் இந்நாளில் கேவலமாகக் கருதப் பட்டுவருவதற்கும், அந்நிலைமை பெற்று விட்டதற்கும் காரணம் பண்ணை உடையவர்கள் அறியாமையினாலும், அகம்பாவத்தினாலும் பண்ணையாள்களிடமும், ஆடு மாடுகளிடமும் காட்டி வரும் கொடும் செயலேயாகும். பண்ணையக்காரன் தன் காட்டில் தனக்காக இரவும் பகலும் மழையிலும் வெயிலிலும், உழைத்து உயிர் விட்டுவரும் ஏழைக் கூலிகளை மக்களாகவே

கருதுகிறதில்லை. இவர்கள் கொடுத்துவரும் சம்பளம் அவனுக்குத்தான் போதுமானதாயிருக்கிறது. அவனுடைய குழந்தைகளும், மனைவியும், வயது முதிர்ந்த தாய் தந்தையும் இவனை நம்பியிருக்கிறார்கள். அந்தோ! இவன் வாழ்வு பரிதாபகரமானது. பண்ணையக்காரனுக்கோ இரக்கமில்லை. மனது கல்லாக இருக்கிறது. என் செய்வான் பாவம்! இதை விரிக்கில் பெருகும். பண்ணையக்காரர்களிடம் வேலை செய்யும் மக்களின் கதியே இவ்வாறென்றால், பேசும் சக்தியற்ற ஆடுமாடுகளின் நிலைமையைச் சொல்லவும் வேண்டுமோ? “ஏழைக் கண்ணீர் கூரிய வாளுக்குச் சம”மென்பது பொய்யாமோ? இப்பாவந்தான் இந் நாட்டில் விவசாயிகளை இவ்வாறு ஆட்டி வருகிறது. பண்ணையக்காரர்கள் இனியேனும் தம்மிடம் உழைத்து வரும், ஏழைக் கூலிகளையும், மிருகங்களையும் நன்கு மதித்து, அவர்கள் க்ஷேமத்தில் கவலைசெலுத்துவார்களாக.

வை. நடேசன்.



159214.

## செடிகளின் உயிர் வாழ்க்கை

## Plant Life.

செடிகளுக்கு ஜீவனுண்டு. அவைகள் வளர்கின்றன. இதற்காக அவைகள் உணவு உண்கின்றன. மனிதரைப்போல் சுவாசிக்காவிட்டாலும் ஒரு வகையில் மூச்சு விடுகின்றன. ஜீவ ஜெந்துக்களைப்போல் அவைகளுக்குச் சரியான உணர்ச்சியில்லை என்றாலும், ஒரு வகையான உணர்ச்சி அவற்றிற்கும் இருப்பதாகத் தெரிகிறது. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு அவைகள் போக முடியாது. அவைகள் நிலத்தில் வேரூன்றி ஒரேயிடத்தில் நிலையாய் நிற்கும். செடிகள் தங்கள் வேர்களின் மூலமாயும், இலைகளின் வழியாகவும் ஆகாரத்தை உண்கின்றன. இலைகளுக்கு ஆகாரம் ஆகாயத்திலிருந்து கிடைக்கிறது. வேர்களுக்கு வேறுவிதமான ஆகாரங்கள் மண்ணிலிருந்து கிடைக்கின்றன, ஆனால் மண் முழுவதுமே செடிகளுக்கு உணவாகிறதென்று எண்ணக்கூடாது. செடிகள் மண்கட்டிகளை அப்படியே தின்ன முடியாது. அவற்றின் ஆகாரம் வேர்களிற் புகுந்து போகும் தண்ணீரிற் கரைந்துதான் உட்செல்லவேண்டும். ஆகையால் செடிகள் ஆகாரம் தின்னக் கூடுமென்று சொல்லாமல் கிரகிக்கக்கூடும் அல்லது குடிக்கக்கூடும் என்று சொல்லலாம். செடிகள் தங்கள் இலைகளின் வழியாய் உணவு உட்கொள்ளவும் சுவாசிக்கவுஞ் செய்கின்றன: ஒரு ஜீவஜெந்துவானது தனக்கு அவசியமான வாயுவைச் சுவாசிக்காவிட்டாலும், தனக்கு ஏற்ற ஆகாரத்தைச் சாப்பிடாவிட்டாலும் செத்துப்போகின்றது. அதைப்போலவே செடிகளும்.

அழகான புஷ்பங்களுக்காகவும் அல்லது பழங்களுக்காகவும் நாம் அநேக செடிகளை வைத்து வளர்க்கின்றோம். ஆனால் பாசியும், பெர்ன்ஸ் (Ferns) என்னும் ஓர் வகை மலை நாட்டுச் செடி முதலானவைகளும் பூக்கிறதில்லை.

புஷ்பிக்கும் செடிகளுக்கெல்லாம் வேர், தண்டு, இலைகள், பூக்கள், காய்களுண்டு. செடிகள் காய்கள் காய்ப்பதற்காகத்தான் ஜீவிக்கின்றன. ஏனென்றால் அவைகளைப்போன்ற புதுச்செடிகளை உண்டாக்கக்கூடிய விதைகள் அந்தக் காய்களில் உண்டாகின்றன. ஒரு செடியின் தண்டாவது நிலத்திலிருந்து மேல்நோக்கிப்போவது, அல்லது நிலத்தின்மேல் படர்ந்தாவது வளரும். அப்படியிருக்க, வேர்களோ அநேகமாக வெளியே தெரியாமல், மண்ணுக்குள் வளர்கின்றன. ஆனால், சில வேர்கள் மண்ணுக்குட் செல்லாமல், செடிகளின் கிளைகளைப் பிடித்துக்கொண்டும் அந்தரத்தில் தொங்கிக்கொண்டும் ஆகாய வேர்களாயிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

பூவாத மரம் காய்க்காதிருந்தால் விதைகளுமுண்டாகாது. ஏனெனில் விதைகள் புஷ்பங்களிலேதான் உண்டாகின்றன. அப்படியானால் பூவாத செடிகளிலிருந்து அவைகளைப்போன்ற கன்றுகள் எப்படியுண்டாகின்றன?

இதை அறிவதற்கு பெர்ன்ஸ் என்னும் மலைநாட்டுப் பூண்டின் இலையை எடுத்துப் பார்க்கவேண்டும். அதன் பாகத்தில் மங்கல்நிறமான அநேகம் சிறு புள்ளிகள் போன்ற மணிகள் காணப்படும். அவைகளுக்குள் தூசுபோன்ற அநேகம் கரு அணுக்கள் அடங்கியிருக்கும். இந்தக் கரு அணுக்களிலிருந்து புதுக்கன்றுகளுண்டாகும். இவ்வுலகத்தில் செடிகள் இல்லையானால், ஜீவஜெந்துக்கள் இருக்காது. ஏனென்றால் அவைகளுக்கு ஆகாரம் கிடையாது. ஜீவஜெந்துக்களுக்குச் செடி ஆகாரம் தருகின்றனவென்பது உங்களுக்குத் தெரியும். நமக்கு வேண்டிய உண்டி, உடை, உறைவிடத்தின் மேற்கூரை இவைகள் அநேகமாய்ச் செடிகள் மரங்களிலிருந்தே கிடைக்கின்றன. மேலும் செடிகள் மரங்களிலிருந்துதான் நமது வண்டிகள், படகுகள், கப்பல்கள் செய்ய மரமும், அடுப்புக்கு விறகும், சாயமேற்ற வர்ணங்களும், வியாதி தீர்க்க மருந்தும் நாம் அடைகிறோம்.

(கமத் தொழில் விளக்கம்)



# ஏலம்

எழுதியவர்.

G. S. ஜீவிதுரை, சூப்பிரண்டு,

ஏலமலை, திருவாங்கூர்.

தாவர சாஸ்திரத்தின்படி ஏலத்தை "எலெட்டேரியா கார்டமம்" (Elettaria Cardamom) என்று சொல்லப்படுகிறது. 1. மலையாளம், திருவாங்கூர், மைசூர் ஜாதி சிறியது, 2. சிலோன் ஜாதி பெரியது ஆக இரண்டு பிரிவுகள் தான் என்று தாவர சாஸ்திரிகள் ஒப்புக்கொள்கிறார்கள். 6 முதல் 30 சிம்புகள் வரை வெடிக்கும், 6 அடியிலிருந்து 8 அடி வரை உயர்ந்தும் சில சமயங்களில் 12 அடி உயரமுமாக ஏலம் குத்துக் குத்தாகப் பயிராகிறது. இடத்தின் மண் உரத்திற்குத் தக்கவாறு உண்டாகிறது. மேல் பக்கம் மெல்லிய கருப்பான பச்சை நிறம் பொருந்தி, கீழ்ப் பக்கம் சிறிது மங்கின பழுப்பு நிறமாய்ச் சுணையோடு கூடிய, சிறிது குறுகி நீளமான இலைகள் மாறுபாடாகச் செடியின் தண்டிலிருந்து உண்டாகின்றன. முதிர்ந்த செடியில் 15 இலைகளிலிருந்து 20 இலைகள் வரை இருக்கின்றன. சரங்களில் சிவப்பும் நீலமும் கலந்த புள்ளிகளுடன் வெண்மையான புஷ்பங்கள் மிகவும் அழகாக இருக்கும். தட்டையின் தூர்களிலிருந்து சரங்கள் உண்டாகி, நீண்டு தரையில் கிடக்கும். அச் சரங்களில் காய்கள் சேர்ந்து சிறு சிறு கொத்துக்களாக இருக்கும். செழித்த காலங்களில் காய்கள் அதிக நெருக்கமாகவும், சாதாரண காலங்களில் கொஞ்சமாகவும் பன்னலா

கவும் இருக்கும். அதனுடைய காய்கள் தோடுகளால் மூடப்பட்டு, முற்றும்வரைப் பச்சை வர்ணமாகவிருந்து, பிறகு அழுக்கடைந்த மங்கிய நிறமாக மாறுகிறது. அக்காய்கள் 3 பொறைகளையுடையதாய், ஒவ்வொரு பொறைக்கும் இரண்டு வரிசைக் கருப்பான விதைகள் நிறைந்து, இனிப்பான ஒரு வகைப் பசை போன்ற ரசம் அவைகளைச் சுற்றிலும் இருக்கிறது. முற்காலத்தில் இவ் விதைகளைச் "சுவர்க்க அரிசி" (Grains of Paradise) என்று வழங்கி வந்தார்கள். அவைகளுக்குக் கொஞ்சம் காரத்துடன் மிகுந்த வாசனையுண்டு. இனிப்புப் பலகாரங்கள், பானங்கள், கறிகள், மருந்துகள் முதலியவைகளில் வாசனைத் திரவியமாகவும், உருசி உண்டாக்கக் கூடிய பதார்த்தமாகவும் அவைகள் உபயோகிக்கப் படுகின்றன. இவ்விடமுள்ள சுதேசிகள் ஏலக்காயை வெற்றிலையோடு உபயோகிக்கிறார்கள். மற்றும், பிறரை அழைக்க என்னும்போது அழைப்புடன் கொஞ்சம் ஏலக்காயை வைத்து அழைப்பது மரியாதையென்று எண்ணுகிறார்கள்.

வெகு அபூர்வமாக ஏலச் செடிகளின் தட்டைகளில் புஷ்பம் புஷ்பிக்குமென்றும், அம்மாதிரிப் பூப்பது இதுவரை தெரியாதென்றும், தானும் இதைப் பார்த்ததில்லையென்றும் கனம் G. D. மன்றோ துரை சொல்லுகிறார். தண்டுகளிலிருந்து பூக்கள் பூத்தால் அத்தோட்டக்காரனுக்குச் சாவோ அல்லது வேறு விதமான கெடுதலோ உண்டாகுமென்னும் ஐதிக எண்ணம் விவசாயிகளுக்குள் நிலவுகிறது என்றும் கூறுகிறார்.

## மகர ஏலம்

மகர ஏலமும் கன்னி ஏலமும் பூவிலும், உருவத்திலும் ஒரே மாதிரியாகவே தோன்றுகிறது. பெரியாறே எல்லையாயிருக்கிறது. அதற்குக் கிழக்கே விளைவது மகர ஏலம் என்றும், மேற்குப் பக்கம் விளைவதற்குக் கன்னி ஏலம் என்றும் வழங்கப்படுகிறது. அவைகளின் புஷ்பிக்கும் காலமும், பலன் கொடுக்கும் காலமும் தோடுகளின் உருவமும் வித்தியாசப் படுகின்றன. சீதோஷ்ண ஸ்திதி வேறுபாட்டால் இப்படி உண்டாவதாகத் தெரிகிறது. மகர ஏலம் உண்டாகும் பிரதேசமானது கொஞ்சம் உயரமான இடமாகவும், சராசரி 100 அங்குல மழையுடையதாகவும், அம்மண் தாவரசத்து நிறைந்து கொழுத்ததாகவும் இருக்கின்றது. அங்கே ஏலச்செடிகள் ஏப்ரல் மீ'த்திலிருந்து மேமீ' வரைக்கும் புஷ்பங்கள் புஷ்பிக்க ஆரம்பித்து, டிசம்பர் ஜனவரி மாசங்களுக்குள் காய்கள் முற்றுகின்றன. அக்காய்கள் நீளமாகவும், 22 முதல் 32 அரிசிகளை உடைத்தாயுமிருக்கின்றன.



## கன்னி ஏலம்

கன்னி ஏலம் விளையும் பிரதேசத்தில் 100 முதல் 200 அங்குலம் மழை வரை பெய்கின்றது. அந்த மண்ணும் பொதுபொதுப்போடு, சாரையாகவும் இருக்கின்றது. அங்கே ஏப்ரல் மீ'த்தில் பூப்பூக்க ஆரம்பித்து அக்டோபர், நவம்பர் மாதங்களில் காய்கள் முதிர்கின்றன. அவைகள் கொஞ்சம் உருண்டை வடிவாகவும், அவைகளில் 18 முதல் 22 அரிசிகள் வரை இருக்கின்றன.

## மைசூர் ஏலம்

மைசூர் சமஸ்தானத்தில் இந்த ஜாதி காணப்படுவதில்லையென்று தெரிவதால், மைசூர் என்ற பேரானது சரியானதில்லை; தப்பான பெயராகும். இதிலுள்ள ஒரு விசேஷமென்னவெனில், ஏலச்செடிகளினின்றும் சரங்கள் தரையில் விழாமல் தூரிலிருந்து செங்குத்தாகப் போகின்றன. அதன் சரங்கள் குட்டையாகவும், காய்கள் நெருக்கமாகவும், தோடுகள் கெட்டியாகவும் இருக்கின்றன. மலையாளம் ஜாதியின் இலையைப் போன்று பின் புறம் மெதுவாகவும் பட்டுப் போன்றும் இல்லாமல், இந்த மைசூர் ஏலத்தின் இலைகள் பெரியவைகளாகவும், சரசரப்பாகவும், கடினமாகவும், வழுவழுப்பாகவும் இருக்கின்

றன. மைசூர்வகை அதிக உருடியானது. இது முக்கியமாகப் பிற்காலத்தில் ஐரோப்பிய விவசாயிகளால் அதிகமாகப் பயிரிடப்பட்டிருக்கிறது. மற்ற இந்த இரண்டு ரகங்களைக்காட்டிலும் இதன் வாசனையானது குறைந்தது.

## இலங்கை ஏலம் அல்லது பெரிய ஏலம்

அதனுடைய சரசரப்பான இலைகளாலும், மட்டைகளாலும், இலையின் அடிப்பக்கம் மெதுவாக இல்லாததாலும், தண்டில் சிறிது நீலமும் சிவப்பு நிறமும் கலந்திருப்பதாலும் இலையுடன் தட்டையைப் பார்த்தால் இலங்கை (சிலோன்) ஏலத்தைச் சுலபமாகக் கண்டறியலாம். அதன் காய்கள் மலையாளம் (மலபார்) வர்க்கத்தைக் காட்டிலும் பெரிதாக இருக்கின்றன. இதை வியாபாரத்திற்கு விரும்பாததால், இது விசேஷமாகப் பயிர் செய்யப் படுவதில்லை.

## விளையும் இடங்கள்

தென்னிந்தியா, சிலோன், ஜாவா, சுமத்திரா, கிழ்த்திசைத் தீவுகள் (Eastern Archipelage), மடகாஸ்கார், மேற்கு ஆப்பிரிக்கா முதலிய தேசங்களில் ஏலம் பயிராகிறது. ஆனால் திருவாங்கூரின் எப்பொழுதும் வளங்குன்றாத மலைப்பிராந்தியங்களில் இயற்கையிலேயே ஏலம் பயிராகிறது.

1071 மலையாளம் ஆண்டு வரை (1896) ஏல விவசாயம் சர்க்காரின் சுதந்திரத்திலேயே சமஸ்தான முழுவதும் இருந்து வந்தது. அச்சுதந்திரமானது ஏல மலைகளிலும் பெரியார் பாதுகாப்புக் காடுகளிலும் நீக்கப்பட்டது.

## ஏலம் இலாகா

தொடுபுழையைத் தலைமை ஸ்தானமாகக்கொண்டு காட்டிலாகாவோடு இணைக்கப்பட்ட பிரத்தியேகமான ஏலம் உத்தியோகஸ்தர்களைக்கொண்டு ஏலம் இலாகா ஒன்று ஏற்படுத்தப்பட்டது.



998-ம் ஆண்டில் (1823) முதலாவது சர்க்காரால் ஏல விவசாயம் உற்சாகிக்கப்பட்டதாகத் தெரிகிறது. தொடுபுழை மார்க்கமாக வைக்கத்திற்குச் சரியானபடி குதிரை போகும் பாதையில்லாததால், காடு முரடான பாதையிலே பொதிமாடுகளின் மேல் மகா ஏல மகசூலைக்கொண்டு சென்றுகொண்டிருந்தார்கள். பிறகு அங்கிருந்து படகிலேற்றி ஆலப்புழைக்குக்கொண்டுபோய் அந்த மகசூலை ரகம் ரகமாய்ப் பிரித்து ஏலத்தில் விடுவது வழக்கம்.

## முதலாவது முதல் வகுப்பு சப் மாஜிஸ்டிரேட்

1044-ம் ஆண்டில் (1869) ஏலம் கிளையானது காட்டிலாகாவிலிருந்து பிரிக்கப்பட்டுத் தனியான ஒரு இலாகாவாக நிர்மாணிக்கப் பட்டது. கனம் மன்ரோ துரைக்கு முதலாவது வகுப்பு உதவி மாஜிஸ்டிரேட் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு, அவருக்கு அடியில் இந்த இலாகா இருந்தது. அவர் வருஷத்தில் 6 மாதத்திற்குக் கோட்டையத்திலும் மற்ற காலத்தில் மகா ஏலத்தின் மத்திய ஸ்தலமாகிய உடும்பன்சோலையிலும் வசித்து வந்தார். குதிரைகள் போகத்தக்க பாதைகள் எல்லாப் பக்கங்களிலும் போட்டது மன்றி, பீர்மேட்டுக்கு ஒரு முக்கியமான பாதையும் திறக்க ஆரம்பித்தார். அப்பாதை போட்டவுடன் அதன் வழியாக ஏல மகசூல் கோட்டயத்திற்குப் பொதிமாடுகள் மூலமாகக் கொண்டு போகப்பட்டது. அங்கிருந்து ஆலப்புழைக்குப் படகுகளின் மூலம் சென்றது.

## பட்டாளம் பத்தோபஸ்து

1024-ம் ஆண்டுமுதல் 1071-ம் ஆண்டு வரைக்கும் (1849–1896) ஒரு ஜமேதார், இரண்டு அவில்தார், ஒரு குமஸ்தா, ஆறு நாயக்குகள், 53 சிப்பாய்கள் ஆகிய இவர்கள் அடங்கிய ஒரு நாயர் பட்டாளத்தை (Nayar Brigade) தனியாகப்பிரித்து, ரோடுகளின் மூலை முடுக்குகளிலும், தாவளங்களிலும், எல்லைப்

பிரதேசங்களிலிருக்கும் நிலையங்களிலும் ஏலக்காயைத் திருட்டுத்தனமாகக் கொண்டுபோகாத வண்ணம் பார்த்துக்கொள்ளும் பொருட்டுக் காவல் வைக்கப்பட்டிருந்தது. அதே சமயத்தில் 10 காவல்காரர்கள் அவர்களுக்கு உதவியாக ஏற்படுத்தப்பட்டார்கள். அவர்களில் பாதிப்பேர் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள பல கிராமங்களிலிருந்து அங்கு நடக்கும் துன்மார்க்கமான செயல்களைக் கவனித்துக்கொண்டும், அவர்களுடைய நடபடிக்கைகளை மலையிலுள்ள உத்தியோகஸ்தர்களுக்குத் தெரிவித்துக்கொண்டும் வந்தார்கள். மற்றவர்கள் எல்லைப்புறங்களிலும் தாவளங்களிலுமாகத் தங்கியிருந்தார்கள். இக்காவல்காரர்களுக்கு ஒவ்வொரு மாதமும் சர்க்காரிலேயே சம்பளம் கொடுக்கப்பட்டது. ஆனால் கடைசியாகக் குடியானவர்களிடத்திலிருந்தே மேற்கண்ட செலவுகளுக்கெல்லாம் வசூலிக்கப்பட்டது.

## குடி விலை

998-ம் ஆண்டிலிருந்து 1015-ம் ஆண்டு (1823—1840) வரைக்கும் 20 ஆங்கில அல்லது 18 உலாந்துதேசப் பவுண்டுகள் கொண்ட துலாம் 1-க்குக் கீழ்க்கண்ட பிரகாரமாகக் குடி விலைப் பணம் ஏல விவசாயிகள் பெற்றார்கள்.

| | | பணம் | | சக்கரம் | | காசு | | ரூ அ பை |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | நல்ல ஏலம் | 60 | — | 0 | — | 0 | = | 8—6—9 |
| (2) | தக்கோலம் | 10 | — | 2 | — | 0 | = | 1—7—6 |
| (3) | அரிசி | 29 | — | 1 | — | 0 | = | 4—1—8 |

1016-ம் ஆண்டில் (1841) விலை விகிதம் சிறிது குறைக்கப்பட்டு, 1044-ம் ஆண்டு வரை அப்படியே நடந்து வந்தது. அடியிற் காட்டியவாறு குடியானவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

| | | ப | | ச | | கா | | ரூ அ பை |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | நல்ல ஏலம் | 55 | — | 0 | — | 0 | = | 7-11—8 |
| (2) | தக்கோலம் | 9 | — | 2 | — | 6 | = | 1—5—7 |
| (3) | அரிசி | 27 | — | 0 | — | 0 | = | 3-12—8 |



## 3 ல் 1 பாகம்

1045-ம் ஆண்டில் (1078) மேற்கண்ட வழக்கத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அப்பொழுது ஏல விவசாயிகளுக்கு ஆலப்புழை ஏலத்தில் போகும் விலையில் 3 ல் ஒரு பாகம் கொடுக்கப்பட்டது. இந்த மாதிரியாக 1061-ம் ஆண்டு வரையில் (1836) நடந்து வந்தது.

## 5 ல் 2 பாகம்

ஏலக்காயின் விலை அநேக வருஷங்களாகக் குறைந்து கொண்டே வந்தது. விலையில் 3ல் 1 பாகம் கிடைத்த வருமானமானது ஏலச் சாகுபடியைச் செய்வதற்குக்கூடப் போதவில்லை. 1062-ம் ஆண்டில் (1887) மூன்றில் ஒரு பங்காய் இருந்ததை அரசாங்கத்தாரால் 5ல் 2 பங்காக மாற்றப்பட்டு 1071-ம் ஆண்டு (1896) வரைக்கும் இது நடந்து வந்தது. பூப்பாறை, உடும்பன்சோலை, வண்டன் மேட்டு, மிளாப்பாறை முதலிய டிவிஷன் ஏல மலையில் 1072-ம் ஆண்டில் (1817) இந்தச் சுதந்திர வழக்கம் எடுக்கப்பட்டது. ஆனால் சமஸ்தானத்தின் மற்ற பாகங்களில் இந்த வழக்கம் இருந்தே வந்தது.

## ரூ 6¼ தீர்வை

ஏக்கர் 1-க்கு ரூ 6¼ வீதம் சாகுபடியான இடங்களுக்கும் ஏக்கர் 1-க்கு ரூ 1 ஆக மூன்று வருஷங்களுக்குப் புதிதாகக் கிருஷி செய்யும் இடங்களுக்கும் 4-வது வருஷமுதல் ரூ 6¼ ஆகத் தீர்வை ஏற்படுத்தப்பட்டுச் சாகுபடி செய்யும் சுதந்திரத்துடன் ஏலக் குடியானவர்களுக்குப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டன. இது ஒரு பரீக்ஷார்த்தமாக 5 வருஷங்களுக்கு அனுமதிக்கப் பட்டது. இந்த முறை நல்லதென்று காணப்பட்டதால், விவசாயம் செய்ய அதிகாரம் பெற்ற பதிவு தேதியிலிருந்து 12 வருடங்கள் வரை வாய்தா கொடுக்கப்பட்டது. தன்னிஷ்டப்பட்ட தீர்வை போட்டு, மறுபடியும் 12 வருஷம் வாய்தாக்கொடுக்க அப்பொழுது அரசாங்கத்துக்கு அதிகாரம் இருந்தது.

## இரண்டு ரூபாய் கிஸ்தி ஆரம்பம்

சில வருஷங்களாய் முக்கியமாகச் சிலோனில் அதிகமான விளைவால் ஏலக்காயின் விலை மிகவும் இறங்கிற்று. அதனால் அப்பொழுது ஏலக்குடிகள் நில வரியைக்குறைக்குமாறு சர்க்காருக்கு விண்ணப்பித்தார்கள்*

---

* 1079-ம் ஆண்டு (1903—1904) ஏல விவசாயிகளுக்கு ஆபத்தான வருஷம். புஷ்பிக்கும் தருணத்தில் மழைக் குறைவால் பலன் இல்லாததாலும், இலங்கை (சிலோன்)யிலும், மற்ற இடங்களிலும் அதிகமான விளைச்சலினால் விலைக் குறைவு ஏற்பட்டதாலும், ஏல விவசாயிகளுக்கு இரண்டு வகைகளில் மிக்க கஷ்டமாகவே இருந்தது. முந்தின வருஷத்தில் அதாவது 1078-ம் ஆண்டில் (1902—1903) துலாம் 30,776 கிடைத்தது. ஆனால் 1079-ம் ஆண்டில் (1903—04) துலாம் 8,268 மட்டும் கிடைத்தது. அதற்கு அடுத்த 1080-ம் ஆண்டில் (1904—05) மகசூலானது 20,432 துலாம் ஆயிற்று. விளைச்சல் ஏதேஷ்டமாக விருந்தாலும், விலையிலோ ஒரு துலாம் ரூ 12 லிருந்து ரூ 8-க்கு வந்து விட்டபடியாலும், அநேக குடியானவர்கள் கிஸ்திகூடக் கட்ட முடியாமல் கஷ்டப்பட்டார்கள். செல்வாக்குள்ள இந்தியர்களும் ஐரோப்பியர்களுமான ஏல விவசாயிகளில் அதிகமானவர்களோடு கம்பத்தில் கனம் திவான் கூட்டின மகாநாட்டின் பலனாக மாட்சிமைவாய்ந்த மகாராஜா அவர்கள் ஏல விவசாயிகள் முன்னேற்றம் அடையத்தக்க பலகாரியங்களைச் செய்யச் சித்தமானார்கள். ஏல விவசாயிகளுக்குச் சர்வசுதந்திர பாத்தியங்கள் மலையில் கட்டிடம் கட்டும் விஷயத்தில் கொடுக்கப்பட்டன. ஏக்கர் 1-க்கு நிலத் தீர்வை ரூ 10 ஏற்படுத்தப்பட்டதை ஆண்டுதோறும் தவணைகளாகச் செலுத்துமாறு குடிகளுக்கு அனுமதி கிடைத்தது. ரூ 6½ தீர்வையானது ரூ 2 ஆகக்குறைக்கப்பட்டது. செல்வதற்கு ஏதுவான பாதைகள் போட ரூ 10,000 அளிக்கப்பட்டது. ஏக்கர் ஒன்றுக்குத் தீர்வை ஒரு ரூபாயாகக் கொடுக்கும் மூன்று வருஷ வாயிதாவானது நான்கு வருஷங்களாக மாற்றப்பட்டது. இதைப்போன்று இன்னும் அநேக சிறிய வசதிகள் கொடுக்கப்பட்டன. இப்படிப் பெரும் சகாயங்கள் செய்வதானது ஏல விவசாயிகளை இன்னும் ஏராளமான புதிய நிலத்தில் ஏல விவசாயம் செய்யவும், குடியானவர்களை மலையில் குடியிருக்கவும் தூண்டும் என்று நம்பப்பட்டது.



## ஏல விவசாயம்

### மண்

தாவர சத்து நிரம்பியுள்ள கொழுத்த மண் நன்கு ஏலம் பயிர் செய்ய அத்தியாவஸ்யமானது. திருவாங்கூரில் 2,000 அடியிலிருந்து 4,000 அடி உயரம் வரை உள்ள இடங்களில் ஏலம் உண்டாகிறது, ஆனால் 3,000 அடியிலிருந்து 3,500 அடி வரைக்குமே அது நன்கு கிருஷி செய்வதற்குத் தகுயான உயரமாகும். வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய எல்லாப் பக்கங்களிலும் ஏலம் ஏராளமாய்க் காய்க்கும். எத்திசையில் உண்டான போதிலும் ஏலத்தில் எவ்வித குண வித்தியாசமில்லை.

### காற்று

காற்றடியை ஏலச்செடி தாங்காது. எவ்வளவுதான் நல்ல மண்ணாயிருந்த போதிலும் சரியே காற்றடிக்குமானால், பலன் பிடிக்காது. நிழலடர்ந்த பள்ளத் தாக்குகளிலும், அருவிகளோடும் பள்ளங்களிலும் நல்ல பலன் கிடைக்கிறது. அம்மாதிரியான இடங்களில் மண்ணும் நல்லதாயிருக்கின்றது. பயிராகும் பூமி செங்குத்தாக இருந்தும் நிழலுக்காக விடப்பட்ட மரங்கள் ஏலச்செடிகளைக் காற்றுத் தாக்காதபடி தடுக்கப்போதாவிட்டால் சேதமுண்டாகிறது. அப்படிப்பட்ட இடங்களில் சாதாரணமாகக் களை யெடுப்பதுங்கூடச் சிலவிடங்களில் சில சமயங்களில் ஏலச்செடிகளின் காய்க்கும் படியான சக்தியைக் கெடுத்துவிடுகிறது, அவைகள் திறந்த வெளிகளிலும், மலையின் உச்சிகளிலும் பயிரான போதிலும் பலன் பிடிக்காது; கிருஷியும் நஷ்டமாகும்.

### மழை

வருஷாந்திர மொத்த மழையால் ஏலம் பாதிக்கப்படுவதாகத் தெரியவில்லை. பழனி மலையில் 60 அங்குல மழையினாலும், இலை

ங்கையில் 120 அங்குல மழையினாலும் ஏலம் வெகு நன்றாக உண்டாகிறது. மகர ஏலம் பிரதேசங்களில் 100 அங்குல மழையும், கன்னி ஏலம் பிரதேசங்களில் 175 அங்குல மழையும் பெய்கின்றது. அதில் மகா முக்கியமானது என்னவென்றால், ஜனவரிமீ த்திலிருந்து மேயீ மத்திவரைக்கும் மண்ணைச் சரியாக நனைத்து, ஈரமாக்கும்படியான சில நல்ல மழைகள் பெய்யவேண்டும். இந்நாளில் மழையில்லாது உஷ்ணமாயிருந்தால், நல்ல பலன் கிடைக்காது என்று எண்ணவேண்டும். முன் மூன்று மாதங்களிலும் மழையில்லாமல் ஏப்ரல்மீ மத்தியிலிருந்து மேயீ மத்தி வரைக்கும் நல்ல மழை பெய்தாலும் பிரயோஜனமில்லை. தென்மேற்குப் பருவக் காற்றானது திருவாங்கூரில் மிக்க அனுகூலமானதென்று கருதப்படுகிறது.

## காடு வெட்டுதல்

நல்ல இடத்தைத் தெரிந்தெடுத்து, முதலில் கீழே முளைத்திருக்கும் செடிகளைச் சுத்தம் செய்து பெரிய மரங்களில் சிலவற்றை வெட்டிக் கீழே வீழ்த்தவேண்டும். இதை வெயில் காலத்தில் செய்து ஏப்ரல்மீ த்திற்குள் முடித்துவிடவேண்டும். சரியானபடி நிழலாயிருப்பதற்காக இப்படிச் செய்வதாகும். பெரியமரங்களை வெட்டி வீழ்த்துவது, மண்ணை அசைத்து ஏராளமான நன்மை உண்டாக்குகிறதென்கிற அபிப்பிராயம் சுதேசிகளுக்கு உண்டு. ஆனால் உண்மையில் வெளிச்சமானது உள்ளே சென்று நன்மையைச் செய்கிறது.

## பழைய காலத்தில் ஏல விவசாயம்

கீழே முளைத்திருக்கும் செடிகளையும், சில மரங்களையும் வெட்டி எறிந்து பறவைகள் எச்சமிடுவதால் கீழே மண்ணில் விழும் விதைகள் முளைத்துத் தானாகவே பயிராகி விடும் என்று நம்பி, மற்றவைகளை இயற்கையிடம் ஒப்புவித்து விடுவது முற்காலத்தில் ஏல விவசாயிகளின் வழக்கம். இம்மாதிரி செய்து



விட்டு, மூன்று வருடங்கள்வரை தங்கள் கிராமத்திற்குப் போய் விடுவார்கள். பிறகு மறுபடியும் தாங்கள் புதிதாய் வெட்டின தோட்டங்களுக்குப் போய்க் களைகளை யெல்லாம் வெட்டி யெறிந்து விட்டு 5-வது வருஷத்தில் கொஞ்சம் மகசூலை எதிர் பார்ப்பார்கள். மற்றும் சிலர் கொஞ்சம் முயற்சியோடு ஏல விதைகளை வாங்கிக் காட்டைச் சுத்தம் செய்த பிறகு, அவ்விதைகளை விசாலமாக விதைத்துவிட்டு 5 வருஷங்கள் வரை ஒருவேலையும் செய்யமாட்டார்கள். விவசாயிகள் இப்பொழுது கிஸ்தி செலுத்த வேண்டியிருப்பதால், அவர்கள் தங்களுடைய வழக்கங்களில் அதிகமாய் விருத்திசெய்து சில ஐரோப்பிய முறைகளையும் கொண்டிருக்கிறார்கள். ஐரோப்பிய விவசாயிகள் கீழே முளைத்திருக்கும் புதர்களை யெல்லாம் வெட்டிக் குவித்து எரித்து விடுவார்கள். அவர்களின் அடுத்த வேலை, வரிசையில் முளைமால் செய்வதேயாகும்.

## வரிசை செய்தல் (Lining)

வரிசை செய்து முளைமால் செய்யும் தூரம் மிகவும் வித்தியாசப்படுகிறது. 6-க்கு 6 அடியிலும் சிலர் 7-க்கு 7 அல்லது 8-க்கு 8 அடியிலும் இன்னும் 9-க்கு 9 அடியிலும் மற்றவர்கள் விரும்புகிறார்கள். இந்தமாதிரி செய்வதில் ஏக்கர் 1-க்கு முறையே 1210, 889, 687 அல்லது 538 செடிகள் இருக்கின்றன. 7-க்கு 7 அல்லது 8-க்கு 9 அடிதான் சாதாரணமாக இடைவெளி விடுவது வழக்கம். குழி வெட்டுமிடங்களி லெல்லாம் ஒவ்வொரு முளை அடித்து விடுவார்கள், சுதேச விவசாயிகள் வரிசை செய்து முளையிடுவதற்கென்று ஒன்றும் செலவு செய்வதில்லை. குழி வெட்டும் பொழுது அவர்கள் தங்கள் கண் மதிப்பிலேயே பார்த்து மத்தியிலிருக்கும் தூரத்தை நிர்ணயித்து விடுவார்கள்.

## குழி வெட்டுதல்

குழிவெட்டுவதில் அளவும் வித்தியாசப்படுகிறது. 2க்கு 2க்கு 1 அடி உள்ள குழிகளைச் சில ஐரோப்பிய விவசாயிகள்

வெட்டுகிறார்கள். சாதாரணமாயிருப்பதைக் காட்டிலும் இது பெரிய குழியாகும். ஆனால் சுதேசக் கிருஷிகர்களோ இதற்கு நேர்மாறாக ஒரு மண் வெட்டியினால் சில வெட்டுகள் வெட்டி ஒரு பள்ளமாக்கியதே போதுமென்று எண்ணுகிறார்கள். ஆனால் 18 அங்குல நீளம், 18 அங்குல அகலம், 12 அங்குல ஆழம் உள்ள குழியே உசிதமானது.

## நாத்துத் தட்டைகள்.

நாத்துத் தட்டைகளைத் தெரிந்தெடுப்பதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் ஒரு தட்டையை மட்டும் நடக்கூடாது. ஜோடி ஜோடியாகச் சேர்ந்திருப்பவைகளையே உபயோகிக்கவேண்டும். பலன் கொடுத்துக்கொண்டிருக்கும் செடிகளின் தூரிலிருந்து அவைகளை எடுக்கக்கூடாது. நாற்றுக்கள் எடுக்கவேண்டும் என்று தீர்மானித்திருக்கும் தூருக்குக் கொஞ்ச தூரம் கீழே தள்ளி ஒரு துவாரம் போட்டு, நாற்றுக்களுக்குக் கீழேயுள்ள மண்ணைக் கையால் தள்ளிவிட வேண்டும். அப்பொழுது அவைகள் குத்துக் குத்தாக வரும். கத்தியினால் வெட்டுவதை நிறுத்திவிடவேண்டும். அந்தத் தட்டைகளைக் கையினாலேயே இரண்டிரண்டாகப் பிரித்துவிடலாம். குறைந்தது 18 அங்குல நீளமான தட்டையாவது நாற்றுடன் சேர்ந்திருக்க விட்டுவிடவேண்டும். தட்டையைக் கொஞ்சமாக விட்டுவிட்டால், வேர்கள் விடுமுன்னும், புதிய குருத்துக்கள் விடுமுன்னும் அது குருத்துவரை அழுகிக் கெட்டுப்போய் விடும். இளம் நாற்றுக்களே நல்ல பலனைக் கொடுக்கின்றன.

இவ்விதமாகத் தட்டைகளை அடிக்கடி செடிகளின் தூர்களிலிருந்து எடுப்பதால், அவைகள் எடுக்கப்படும் பக்கத்தில் காய்கள் காய்ப்பதில்லை. ஆகையால் விவசாயிகள் அந்த இடத்திலுள்ள பூராச் செடியையும் எடுத்துவிட்டு அவ்விடத்தில் வேறு ஒரு புதிய ஜோடியான தட்டைகளை வைக்கிறார்கள். ஏல மலையில் இந்தத் தட்டைகளை ஆயிரம் 10 ரூபாயாக வாங்கலாம்.



சுதேசக் குடியானவர்கள் அவைகளைக் கவலையீனமாக எடுப்பதால், அவைகளில் அதிகம் சேதம் உண்டாகிறது. நாற்றுக்கள் வாங்கும்பொழுது அந்நாற்றுக்களில், ஏலம் இலைகள் இருக்கின்றனவா என்று கவனிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஏலச் செடியைப் போன்று தண்டும் குருத்தும் உள்ள காட்டிலிருக்கும் கூவை என்னும் செடியை வாங்கியதாக வாங்கியவர்கள் பின்னால் அறிவார்கள்.

## நாற்று உண்டாக்கும் இடங்கள்.

வியாதியற்ற நல்ல உறுதியான செடிகளிலிருந்தே நாற்றுக்கள் விருத்தியாக்கப்படுவதால், நாற்றங்கால்களில் நாற்றுக்களை உண்டாக்குவது நல்ல வழியே. நோயில்லாத, நல்ல பலமான செடிகளிலிருந்து பெரிய பழங்களைப் பொறுக்கி எடுக்க வேண்டும். அவைகளின் விதைகள் முற்றினவைகளாகவும் இருக்கவேண்டும். அந்தக் காய்களைக் கையினாலேயே பிசைந்து விதைகளை எடுக்க வேண்டும். சிறு விதைகளை யெல்லாம் தள்ளிவிடவேண்டும். விதைகளைச் சுற்றியிருக்கும் ஒரு பசைபோன்ற வஸ்துவானது விதைகளை ஒட்டிக்கொண்டிருக்கும்படி செய்கிறது. காற்றிலாவது சூரிய வெப்பத்திலாவது வைத்தால் அவ்வாறு அவைகள் ஒன்றாயிருப்பது பிரிந்துவிடும். அவைகள் உலர்ந்தவுடன், தண்ணீரில் சில மணி நேரம் ஊறவைக்கவேண்டும்.

விதைக்கப்படும் தரையில் 1 அடி ஆழத்திற்கு மேல் நன்றாய்க் கொத்தி, வேர்களையும் கற்களையும் பொறுக்கி எடுத்து எறிந்துவிடவேண்டும். ஒவ்வொன்றிற்கும் 2 அடி தூரம் இடைவெளி விட்டு, 4 அடி அகலமுள்ள பாத்திகளாகச் செய்யவேண்டும். இந்த 2 அடி இடைவெளியுள்ள இடத்தில் மண் குவித்திருப்பதின்மேல் 6 அங்குலம் அகலமுள்ள நடைபாதைகள் உண்டாக்கவேண்டும். இந்தப்பாத்தியின்மேல் 1 பங்கு மணலும் 1 பங்கு தாவர சத்தும் கலந்துபோட்டுப் பொறுக்கி வைத்திருக்கும் விதைகளைப் பரவலாக விதைக்க வேண்டும். பிறகு மறுபடி

யும் அந்தக் கலப்புமண்ணால் இலேசாக மூடவேண்டும். பயிர் உண்டாக்கும் இடங்களில் செடிகளினாலாவது நிழலயிருக்கவேண்டும். அதைக்காட்டிலும், தண்ணீர் விழாதபடி சாய்வாக வேய்ந்த கூரை போடுவதே நல்லது. வேளா வேளைகளில் தண்ணீர் விட்டு நாற்றங்காலை ஈரமாக வைத்துக் கொண்டிருக்கவேண்டும். மலையில் ஏலம் விதைகள் முளைவிட மூன்று மாதங்களாவது செல்லும். ஆனால் தரைப்பாகங்களில் அவ்வாறு முளைக்க அநேக வாரங்கள் செல்லும். திருவாங்கூர் ஏலம் விதையானது வெகு மெதுவாக வளரும். அதற்கு அடிக்கடி ஈரமாகவும் இருக்க வேண்டும். ஆகையால் அடிக்கடி தண்ணீர் விடுவதில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். திருவாங்கூர் விதைகளைவிட மைசூர் ஏல விதையே சீக்கிரத்தில் முளைத்து நன்றாய்ப் பயிராகிறது.

ஒரு பவுண்டு பச்சை ஏலக்காயில் சராசரி 13,000 அரிசிகள் இருக்கின்றன. ஒரு பவுண்டு புதிய காய்களில் கால் பவுண்டு அரிசி கிடைக்கிறது. செடிகளைப் பிடுங்கி நடுவதை விட்டுவிட வேண்டும், ஏனெனில் அதில் அதிக ஆபத்துக்கள் உண்டு. ஆகையால் 1 அடி உயரம் வளரும் வரையில் செடிகள் நாற்றங்காலில் இருக்கும்படியாகப் பாவலாக விதைகளை விதைக்க வேண்டும். நாற்றுக்களை எடுக்கவேண்டியது அவசியமானால், அவைகள் இரண்டு இலைகள் விடும்வரையாவது பொருத்திருக்க வேண்டும். நாற்றுக்கள் 1 அடி உயரம் வளர்ந்த பிறகுதான் அவைகள் நடுவதற்குத் தகுதியாயிருக்கின்றன.

## குழிகள் மூடுவது

குழிகளை மூடும்பொழுது அங்கு கிடக்கும் எல்லா வேர்களையும், கற்களையும் எடுத்து எறிந்து விட்டு, அந்தக் குழியில் மற்ற தரையைக் காட்டிலும் கொஞ்சம் உயரமாக இருக்கும்படி மண் குவிக்க வேண்டும்.



## நடுதல்

இது ஒரு அதிக முக்கியமான வேலை. எடுக்கும் பொழுதும் கொண்டு போகும் பொழுதும் சில இரட்டை நாற்றுக்கள் பிரிபட்டு விடும். அப்பேர்ப்பட்டவைகளை நீக்கிவிட்டு, இரட்டை நாற்றுக்களை மட்டும் நடவேண்டும். குவித்திருக்கும் மண்ணில் கையினால் பள்ளம் தோண்டி, பக்குவமாய் வேர்களைப் பரப்பி விட்டு, தண்டுவரைக்கும் சாய்வாக இருக்கும்படி நடவேண்டும்.

செடியின் முக்கால் பங்குவரை மண்ணில் வைத்து, சுற்றியிருக்கும் தரை மட்டம்வரைச் சரியாகும்படி கையினால் மண்ணை அமுத்தவேண்டும். கால்பங்கு செடி வெளியில் தெரியவேண்டும். முற்றிலும் மூடிவிட்டால் செடி கெட்டுப்போய் விடும். உயரமாக இருக்கும் மண் குவியலின்மேல் நாற்றை நடக்கூடாது. ஏனென்றால் மரங்களின் மேலிருந்து விழும் இலைத் தண்ணீர் செடியைச் சுற்றியிருக்கும் மண்ணை அறித்துக் கொண்டுபோய், அதன் தண்டை அதிகமாக வெளியே தெரியும்படி செய்துவிடுவதினால், சூரிய வெப்பம் தாக்கிச் செடி பட்டுப்போகும். களையெடுக்கும் கூலிகள் இதைக் கவனித்து, அவசியமானால் சரியாய் மண்ணைப் போடவேண்டும்.

## களையெடுத்தல்

தேயிலை, காப்பித் தோட்டங்களில் களையெடுப்பது போன்று, இங்கு சுத்தமாய்க் களையெடுப்பது அநாவசியம். திருவாங்கூரில் புதிதாய் வெட்டிய காடுகளில் முளைத்திருக்கும் பச்சைப் பசேலென்ற சிறு செடிகள் மிருகங்களின் மனதைக் கவரத்தக்கதாயிருக்கின்றன. மிருகங்களால் தின்னப்படும் ஆபத்தும் இளஞ் செடிகளுக்கு உண்டு. புதிய காடுகளுக்கும் பழைய காடுகளுக்கும் வருஷத்தில் 3 அல்லது 4 களையெடுப்பது எதேஷ்டமானது. பழம் பழுக்குமுன் நவம்பர் மாசத்தில் ஒரு களையெடுக்கவேண்டும். தூர்கள் அடர்ந்து செடிகள் நன்றாய் வளரும்பொழுது களைகள் முளைப்பதில்லை, ஆனால் அருகில் ஒருவிதப் புல் மட்டும் உண்டாகித் தரையில் படர்ந்து கிடக்கும்.

(இன்னும் வரும்.)

## ஆசிரியர் குறிப்புகள்.

### ஸ்ரீமதி பண்டிதை பத்மாசனி அம்மாள்

நமது "ஏல விவசாயி"ப் பத்திரிகையில் "இயற்கை மகவு" என்ற மாற்றுப் பெயருடன் வியாசம் வரைந்தது இலங்கை மேலப்புலோலி ஸ்ரீமதி பண்டிதை பத்மாசனி அம்மையாரென்று இப்பொழுது தெரிவிக்கும் காலம் வந்துவிட்டது.

இந்த அம்மாள் அடிக்கடி பத்திரிகைகளுக்கு எழுதிக் கொண்டிருக்கிறபடியால், தமிழ் பத்திரிகை உலகுக்கு இந்தப் பெண்மணியைத் தெரியும். இவர் மதுரைத் தமிழ் சங்கப் பண்டிதப் பரீட்சையில் வெற்றி பெற்றதுமன்றி, தங்கப் பதக்கப் பரிசும் பெற்றிருக்கிறார். அன்றியும் ஷை தமிழ் சங்கத்தில் நமது பண்டிதை அம்மையாரே முதலாவது பெண் அங்கத்தினராவர். இவ்வாறு இவருக்கு இத் தனிப்பெரும் பெருமை கிடைத்திருக்கிறது. இன்னும் இவருக்கு சமஸ்கிருதத்திலும் பயிற்சியுண்டு; ஆங்கிலத்திலும் அறிவுண்டு; சங்கீதத்திலும் சாமர்த்தியமுண்டு.

சுமார் தன் 27-வது ஆண்டு வரை, தனது காலத்தைக் கல்வி கற்கும் துறையிலேயே செலவு செய்து தன் இளைய சகோதரர் பி. எ. (B. A.) வகுப்புக்கடந்து கலாசாலையில் ஒரு ஆசிரியராகும்வரைக் காத்திருந்தார். இப்பொழுது தான் இவர் புதிய வாழ்க்கையில் பிரவேசித்திருக்கிறார். சென்ற ஏப்ரல்மீ 30உ இந்த ஸ்ரீமதி பத்மாசனி அம்மாள் அவர்களுக்கும் அவ்வூர் திருக்கோணமலை டாக்டர் ராஜேந்திரம் அவர்களுக்கும் விவாகம் விமரிசையாக நடைபெற்றது.



திருமகள் அம்மையார் பன்னெடுநாளாகக் கல்விகற்றுத் தனது வாழ்வைக் கல்விக்கே அர்ப்பணம் செய்திருக்கிறவர்; நற்குண முடையவர்; பண்டைத் தமிழ் நாட்டு வீரத் தாய்மார்களிடம் ஆர்வமுடையவர்; விவாகம் இன்னதென்று அறியாத வயதில் பால் மணம் அறாத பச்சைப் பசுங்குழந்தைகளைப் பொம்மைகள் போன்று மணம் செய்விப்போர்களுக்கு அம்மையார் ஒரு வழிகாட்டியாக விளங்குகிறார். பால்ய விவாகம் தொலைய வேண்டுமானால், நமது நாடும் சமயமும் பாஷையும் உன்னத மடைய வேண்டுமானால், பல பத்மானிகள் தோன்றல் தேவை தேவை என்று சொல்லத் தேவையில்லை. ஸ்ரீமதி பத்மாசனி தேவி அவர்களுக்கும் திருவாளர் வைத்தியர் ராஜேந்திரம் அவர்களுக்கும் நோயற்ற நீண்ட சந்தோஷ சாந்தியான வாழ்வையும் சகல பாக்கியங்களையும் தந்து அருள்பாலிக்குமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். அவரும் அவர்களுக்கு அவ்விதமே அருள்வாராக. அவர்களது மணம் மணமாகி மணக்க! மணக்க!!

### நிலக்கடலை

உத்தமபாளையம் தாலுகாவில் 1900 வருஷத்திற்குப் பிறகே நிலக்கடலைப் பயிராக்கப்பட்டிருக்கிறதாக எனது ஞாபகம். 1904 வருஷத்தில் தேவாரத்திலுள்ள தோட்டமொன்றில் நான் முதன் முதலாக நிலக்கடலைச் செடியைக் கண்டது எனது ஞாபகத்தில் இன்னும் அப்படியே அகலாமலிருக்கிறது. இப் பக்கங்களில் உழுவாரற்றுக் கிடந்த நிலங்களில் நிலக்கடலைப்பயிர் செய்து, தக்கலாபம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். இவ் விவசாயம் வெகு சீக்கிரத்தில் நமது தாலுகாவில் அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கிறது. இதன் விசேஷ வருமானத்தை உத்தேசித்து இதற்குச் "சின்ன ஏலக்காய்" என்ற பட்டப் பெயர் இப் பாகங்களில் ஏற்பட்டிருக்கிறது.

பண்டு தொட்டுச்சிறிதும் மாற்றமின்றிக் காலப்போக்குக்குத் தக்கவாறு வேறு வேறு கிருஷி செய்யாது, இன்னும் அப்படி

யே உழுதுகொண்டு வரும் நமது ஏழை விவசாயிகளுக்கு இந் நிலக்கடலைப் புதிதாக வந்தது சந்தோஷமே; தக்க வரவேயாகும்.

இதற்கு நிலக்கடலை, வேர்க்கடலை, கடலைக்காய், மணிலாக் கொட்டை என்ற பெயர்கள் உண்டு. நமது தேசத்தில் இந்தப் புதிய வேளாண்மை மிகவும் விருத்தியாகிக் கொண்டிருக்கிறது. இது அற்ப வேலையில் அதிக வருமானம் கிடைக்கும் விவசாயமாயிருப்பதால், விவசாயிகள் மிகவும் விரும்பிக் கிருஷி செய்கிறார்கள்.

இதன் உபயோகங்களோ அநேகம். இதைச் சாதாரணமாக வறுத்துத் தின்கிறார்கள். பருப்புகளிலிருந்து எடுக்கும் எண்ணெய் பலகாரங்கள் செய்வதிலும் சமையல் செய்வதிலும் உபயோகப்படுகிறது. நிலக்கடலையிலிருந்து சில அயல் தேசங்களில் வெண்ணெய் செய்யப்படுகிறது. நிலக்கடலை உடைப்பதற்கும் எண்ணெய் எடுப்பதற்கும் செக்குகளும் இயந்திரங்களும் உபயோகப்படுத்தப்படுவதால், கைத்தொழில் விருத்திக்கும் இது சிறிது உதவுகிறது. கடலை எண்ணெய்க்கு உலகின் தேவை அதிகரித்துக்கொண்டே வருகிறது. நிலக்கடலையின் தோல் அடுப்பெரிக்கவும் எருவாகவும் உபயோகப்படுகிறது. கால் நடைகளுக்குக் கடலைப் புண்ணாக்கு நல்ல ஆகாரமாக ஆகிறது. பால் பசுக்களுக்குக் கடலைப்புண்ணாக்கிட்டால் அதிகமான பால் கொடுக்கிறது. இப்புண்ணாக்கு உயர்தரமான உரம். இதன் செடிகள் பச்சையாயிருந்தாலும் உலர்ந்து போயிருந்தாலும் கால் நடைகளுக்கு நல்ல தீனி.

அமெரிக்கா புக்கர் வாஷிங்டனால் ஏற்படுத்தப்பட்ட டஸ்கீகிப் பாடசாலையின் பேராசிரியர் கார்வர் என்பவர் நிலக்கடலையைப் பற்றி ஆராய்ச்சி செய்து, நிலக்கடலையின் உபயோகங்களைப்பற்றிப் பின்வருமாறு அறிவிக்கிறார்:— ஒரு டம்ளர் நிலக்கடலையிலிருந்து பசுவின் பாலைப் போன்று சத்துள்ள ஒரு பயிண்ட் உயர்ந்த பால் உற்பத்தி செய்யலாம். அதைக் காபி, தேயிலை முதலியவைகளுக்கும் உபயோகிக்கலாம். வியாதியஸ்தர்களுக்கு இந்தப் பால் மிகுந்த உபயோகமாயிருக்கும். இதிலிருந்து தயிர் முதலியவை



களையும் தயார் செய்யலாம். பசுவின் பாலிலுள்ள கொழுப்பை விட 12 மடங்கு அதிகமாக வேர்க்கடலையின் பால் இருக்கிறபடியால், சாதாரணப் பாலுக்குப் பதிலாக இதை உபயோகப்படுத்தலாம். நிலக்கடலையிலிருந்து ஐந்து வித மாவுகளும் ரொட்டிகளும், கால்நடைகளுக்கு வேண்டிய நான்குவித ஆகாரங்களும் தயாரிக்கலாம். பருப்பின்மேல் மூடியுள்ள மெல்லிய சிவப்புத் தோலிலிருந்து கோயினா செய்யலாம்.

மேலை நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படும் பிஸ்கோத்துக்கள் எப்படி எதனால் செய்யப்படுகின்றனவென்பதை நாம் கவனிக்கிறதில்லை. தவிடுகளை இயந்திரங்களில் அரைத்து, அப்பால் அவைகளுக்கு உருசியேற்றி அநேக வகை பிஸ்கோத்துக்கள் செய்யப்படுகின்றன. நல்ல உருசியான சத்தான சரியான சாப்பிடும் சாமானாகிய நிலக்கடலையை எத்தனையோ வகையான உணவுப் பொருளாகச் செய்யலாம். இவ்வாறு இதன் விஷயங்கள் இருப்பதினால், இது விவசாய உலகில் பெரிதும் வரவைக் கொடுக்கிறது.

### தபால் வசதிகள்

“பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தியாவுக்குச் செய்திருக்கும் நன்மைகள் என்ன?” என்று மிடில், ஹைஸ்கூல் வகுப்புகள் வருஷாந்திரப் பரீட்சைகளில் சுமார் 12 வருஷங்களுக்கு முன்பு அடிக்கடி கேள்விகள் கேட்கப்பட்டன. ஆங்கில அரசாங்கம் இந்தியாவுக்குச் செய்திருக்கும் நன்மைகளைப்பற்றி ஆராய்ச்சி யற்ற பட்டதாரிகளாலும் பண்டிதர்களாலும் சர்க்கார் சேவகர்களாலும் சர்க்கார் தாசர்களாலும் எழுதப்பட்ட பாடப் புஸ்தகங்களிலும், சரித்திரப் புஸ்தகங்களிலும் அதிகமாகக் காணப்படும். அப்படியே அவைகளை மனப்பாடம் செய்யவேண்டுமென்பது அக் காலத்து உபாத்தியாயர்கள் உத்திரவு; அவர்கள் போதனையும் அவ்விதமே. உபாத்தியாயர்களுக்குத் தெரிந்ததை அப்படியே பையன்களிடம்

ஒப்புவித்து விடுவார்கள். அவர்களில் அநேகர் கிராமபோன் பிளேட்டுகள்தான். சர்ச்சையற்ற சின்னஞ் சிறுவயதில் அப்படியே நம்பத்தான் வேண்டியிருக்கிறது. " சிவாஜீ கொள்ளைக்காரன். லார்டு கிளைவ் வீரன். இந்தியர் காட்டு மிராண்டிகள். ஆங்கிலர்கள் நாகரீகம் அடைந்தவர்கள். " அக்காலத்துப் படிப்பு இது. இது இவ்வாறு இருக்கட்டும்.

தபால் வசதிகளை அதிகமாக இந்தியாவில் செய்திருக்கிறோம் என்று பறை சாற்றும் அரசாங்கம், தபால் இலாகாவால் எவ்வளவு வருமானத்தை அடைகிறதென்று சொல்லத் தேவையில்லை. தபால் இலாகாவின் வருமானத்தில், அதிகமாகச் சென்ற வருஷம் மிகுந்திருக்கிறது. தபால் விகிதத்தைக் குறைப்பதா அல்லது தபால் இலாகா உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளத்தை அதிகப்படுத்துவதா என்று அரசாங்கம் திகைத்துக் கொண்டிருக்கிறது.

உத்தமபாளையம் தாலுகாவில் வசதிகளற்றுக் கவனிப்பாரற்று எத்தனையோ கிராமங்கள் கிடக்கின்றன. போடிநாயக்கனூர் ஜமீனில் எத்தனை கிராமங்கள் இருக்கின்றன? எத்தனைத் தபால் ஆபீஸ்கள் இருக்கின்றன? வளப்பம் வாய்ந்த கம்பம் பள்ளத்தாக்கில் எத்தனைத் தபால் ஆபீஸ்கள் இருக்கின்றன? நீர் வளம் நில வளம் மலை வளம் வாய்ந்து, ஜனத் தொகை மிகுந்து, அறிவுப் பெருக்கம் பெற்று விளங்கும் இத் தாலுகாவில் தபால் வசதிகள் சரியானபடி கிடையாது. பொட்டிப்புரம், காட்டுநாயக்கன்பட்டி, கடமலைக்குண்டு, நாகலாபுரம், சுருளிப்பட்டி முதலிய பட்டிகளில் தபால் வசதிகள் எப்படி யென்று சொல்லவும் வேண்டுமோ?

காமயகவுண்டன்பட்டியில் தபால் ஆபீஸ் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று சிலர் முயற்சி செய்ய, அதற்கு உடனிருந்து உதவுபவர்கள் இல்லாது போகவே அவர்களது ஆவேசம் அத்துடன் அடங்கிவிடும்படியாயிற்று. இப்பொழுது இக் கிராமத்திற்குக் காலமும் வந்திருக்கிறது; உணர்ச்சியும் பிறந்திருக்கிறது. இக்



கிராமவாசிகள் ஏகோபித்துத் தபால் ஆபீஸுக்காக விண்ணப்பித்திருக்கிறார்கள். கம்பம் பள்ளத்தாக்கில் பெரியாற்றுக்குக் கீழ் பாகத்தில் இதுவே முக்கிய பெரிய மத்தியான கிராமம். சங்கராபுரத்திலும், சில்லமரத்துப்பட்டியிலும் தபால் ஆபீஸுகள் உடனே திறக்கப்பட வேண்டும். இக் கிராமவாசிகள் உடனே முயற்சி செய்வார்களாக. இதற்கு போடிநாயக்கனூர் ஜமீனும் உதவியாயிருக்க வேண்டும்.

தந்தி வசதி

எல்லா முக்கிய கிராமங்களுக்கும் தந்தி வசதிகள் செய்து கொடுக்க ஏற்பாடுகள் ஆகியிருக்கின்றன என்று சர்க்கார் அறிக்கையில் வெளியிட்டு, சர்க்கார் தன்னைத்தானே விளம்பரப் படுத்திக் கொண்டிருக்கிறது. நம் தாலுகாவில் எத்தனை பெரிய கிராமங்களிருக்கின்றன! எத்தனைத் தந்தி ஆபீஸுகள் இருக்கின்றன? திருவாங்கூர் ஏல விவசாயிகளின் தேவாரம் கிளைச் சங்கத்தார்கள் தேவாரத்தில் ஒரு தந்தி ஆபீஸ் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று தீர்மானித்துத் தபால் தந்தி இலாகா உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கு நடவடிக்கை செய்து மூன்று வருஷமாகியும், கேட்கும் தொகை டிபாசிட் கட்ட முன்வந்து ஒரு வருஷமாகியும் இன்னும் தந்தி ஆபீஸைக் காணோம். குடிகளின் நன்மைக்காகத் தந்தி ஏற்படுத்துவதா? சர்க்காரின் வரவுக்காகத் தந்தி ஏற்படுத்துவதா? இது வியாபார அரசாங்கமா? என்ன இது?

தலைமைச் சங்கம்

நமது திருவாங்கூர் ஏல விவசாயிகள் தலைமைச் சங்கத்தைப் பற்றி, நான் தூஷணையாகச் சென்ற "ஏல விவசாயி"ப் பத்திரிகையில் எழுதியதாகச் சிலர் என் மீது அவதூறு சொல்லியது, எனக்கு மிக வருத்தத்தைக் கொடுத்துவிட்டது. வியாதியைக் குணப்படுத்த இரு முறைகள் இப்பொழுது கையாளப்படுகின்றன:— ஒன்று மருந்து, மற்றொன்று சஸ்திரம் ரணசிகிச்சை

ஆபரேஷன் (ஆபரேஷன்). சஸ்திரம் என்பது சமஸ்கிருத பதம், சஸ்திரம் என்னும் வார்த்தையை வேறு விதமாய் எண்ணி இல்லாத அருத்தத்தை வருவித்துக் கொண்டார்கள். இதற்கு நான் என்ன செய்யட்டும். ஐயோ! ஒன்றும் எழுதமுடியவில்லை. எனது பேனாத்தயங்குகிறது.

தலைமைச் சங்கத்திற்கு உற்சாகம் கொடுக்கவே இவ்வாறு எழுதினேன். "சத்திரம்" என்று சர்வ சாதாரணமாய் கிராமங்களில் வழங்கும் இப் பதத்திற்கா என்னை விசாரணை? தலைமைச் சங்கத்திடம் அளவற்ற பிரியம் எனக்குண்டு. தலைமைச் சங்கத்தின் ஒப்பால்தான் இப் பத்திரிகையும் நடைபெறுகிறதென்பதை நான் எப்படி மறப்பேன்?

உசிலம்பட்டியில் விவசாயப் பள்ளிக்கூடம்

இந்தியா ஒரு விவசாய தேசம். விவசாயத்தைப்பற்றிப் புத்தம் புதிய ஆராய்ச்சிகள் நம் நாட்டில் எப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டும். இந்தியாவின் வறுமையைப்பற்றி அடிக்கடி படித்தும், கேட்டுமிருந்த கனம் ஆர்னல்டு லப்டன் என்பவரை நமது தேசத்திற்கு வந்து பார்க்கும்படி தூண்டியது. அந்த அறிஞர் நமது நாட்டைப் பார்வையிட்டு மேன்மை தங்கிய ராஜப்பிரதிநிதி யவர்களிடமும், மாகாண கவர்னரவர்களிடமும் கண்டுபேசி, இந்தியாவின் அபிவிருத்தியானது சாஸ்திரீய விற்பன்னர்களின் கையிலிருக்கிறது என்று கூறியிருக்கிறார். டாக்டர்கள் போஸ், ராய், ராமன் முதலியவர்கள் சாஸ்திரீய உலகத்தில் இந்தியாவிலிருந்து பெயர் பெற்றிருக்கிறார்கள். விவசாய சாஸ்திரத்தில் ஆராய்ச்சியில் இந்தியரில் ஒருவரும் இன்னும் பேர்பெற்று விளங்கவில்லை. எத்தனையோ விற்பன்னர்கள் வெளிவர வேண்டியிருக்கிறது.

கோயமுத்தூர் விவசாயக் காலேஜில் சென்ற வருடத்தில் வாசிக்கும் பொருட்டு 173 மாணவர்கள் விண்ணப்பம் செய்தும்,



43 மாணவர்களே சேர்த்துக்கொள்ளப்பட்டார்களென்று கேள்வி. இம் மாணவர்கள் படித்துப் பட்டம்பெற்று விவசாய இலாகாவில் உத்தியோகம் செய்யவே, விவசாயக் கல்வி கற்கவேண்டும்; பூமியில் சாஸ்திரீயமாய் நூதனமாய் விவசாயம் செய்ய வேண்டும்; நாட்டுக்கு நன்மைகள் செய்ய வேண்டும்; சுதந்திரத்துடன் வாழ வேண்டும் என்ற நோக்கத்துடன் விவசாயக் காலேஜில் படிக்க வருபவர்கள் கிடையாது! உத்தியோக வேட்டைக்கே விவசாயக் கல்வியும் கற்கிறார்கள்!! மற்ற நாடுகளில் இம்மாதிரி கிடையாது. இது நாட்டிற்கே அவமானம். நமது தேசத்தில் அதிகமான மாதிரி விவசாயப் பண்ணைகள் ஏற்படுத்தி, விளக்குப் படம், சினிமாக் காட்சி, பிரசங்கங்கள் முதலியவைகளின் மூலம் ஏழைக் கிராமவாசிகளுக்குப் போதிக்கவேண்டும்.

அடுத்த வருஷம் உசிலம்பட்டியில் ஒரு விவசாயப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்படுமென்று, சமீபத்தில் கனம் மந்திரி சேதுரத்னம் அய்யர் அவர்கள் அறிவித்திருப்பது சந்தோஷப்படத்தக்க செய்தியாகும். இப் புதிய கல்விச்சாலையில் உண்மை விவசாயிகளின் மக்களே தெரிந்தெடுக்கப்பட வேண்டும். பாடங்கள் தமிழிலேயே போதிக்கப்பட வேண்டும். படித்துத் தேரிய மாணவர்களுக்குச் சுமார் 10 ஏக்கர் நிலமும், விவசாயத்திற்கு முதலில் வேண்டிய முதலும் கொடுத்து விவசாயக் கல்வியை வளர்க்க வேண்டும். ஏழைக் குடியானவர்களில் அநேகருக்குச் சொந்த நிலமேது? பணமேது? ஆகையால் சர்க்காரே உதவி உற்சாகம் உண்டாக்க வேண்டும்.

ஏல விவசாயிகளுக்கு என்ன உதவி?

பழ விருட்சங்களைப்பயிர் செய்பவர்களுக்குக் கடனாகக் கொடுத்து உதவும் பொருட்டு 10 லட்சம் ரூபாய் மைசூர் சமஸ்தானம் சாங்ஷன் செய்திருக்கிறது. விவசாயமும், கைத் தொழி

லும், கல்வியும் தக்கபடி அங்கு உற்சாகிக்கப்படுகின்றன. இன்னும் 10 வருடங்களில் இந்திய சமஸ்தானங்களில் மைசூரே பல வழிகளிலும் முதன்மை பெற்று விளங்கும்.

ஏல விவசாயிகளிடம் எத்தனையோ லட்சம் வரி வாங்கும் திருவாங்கூர் சர்க்கார் என்ன என்ன உதவி செய்திருக்கிறது! ஏல விவசாயத்தில் ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்களா? ஏல விவசாயிகளுக்கு விவசாய விருத்தியில் பண உதவி உண்டா? ஒன்றுமில்லை. மைசூர் சர்க்கார், சென்ற நமது மகா நாட்டிற்கு அதன் கைத்தொழில் டைரெக்டரை அனுப்பி நம்மை உற்சாகப்படுத்தியது. "குதிரை தூக்கிப்போட்டதுமன்றி குழியும் பறித்தது" என்ற பழமொழிபோல் திருவாங்கூர் சர்க்கார் நமது விஷயத்தில் செய்கிறது. நாம் அயலவர்களாம். ஆகையால் நமக்கு நிலம் கொடுக்காமல் திருவாங்கூர் அரசாங்கம் பல்லைக் கடித்துக் கொண்டிருக்கிறது.

### மிளகு

சம்பாரவர்க்கங்களில் முதன்மை பெற்றவைகளில் மிளகும் ஒன்று. மிளகுக் கிருஷி செய்துகொண்டிருந்த தீவுகளில் மிளகுக் கிருஷியைக் குறைத்து ரப்பர் பயிரிட ஆரம்பித்துவிட்டார்கள். இவ்வாறு மிளகு விவசாயம் குறைந்துவிட்டது. உலகத்தேவைக்குத் தக்கபடி மிளகு வேண்டுமல்லவா? திருவாங்கூர் மிளகுக்குப் பேர்போனது. கடல் மட்டத்திற்கு 2,500 அடிக்கு மேற்பட்ட இடத்தில் மிளகு செழித்து வளரும். மிளகுக் கொடிகள் உண்டாவதற்கு மரங்களும் தேவையாயிருக்கின்றன.

ஏலத் தோட்டங்களில் இதை உப கிருஷியாகப் பயிரிடலாம். இப்படிச் செய்வதற்கு ஏல விவசாயிகளில் சிலராவது முன்வர வேண்டும். கோம்பை ஸ்ரீமான் திருமலைசப்பு செட்டியாரவர்களின் மானேஜ்மெண்டில் இருக்கும் பொன்முடி எஸ்டேட்டில் மிளகுக் கிருஷி செய்யும் பொருட்டுத் தொடுபுழையிலிருந்து மிள



குக் கொடிகள் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்று ஷை எஸ்டேட் சூப்பிரண்டு ஸ்ரீமான் வடிவேல் அவர்கள் சமீபத்தில் எனக்கு அறிவித்தார். இவர்கள் புதிய முயற்சி பயனளிக்கட்டும், பலரைத் தூண்டட்டும்.

### நம் சங்கத்திற்குப் புதிய திட்டம்

மேமீ 11உ கூடிய திருவாங்கூர் ஏலவிவசாயிகள் சங்கத்தின் நிர்வாகக் கூட்டத்தில் சங்க முன்னேற்றத்திற்கு வேண்டிய திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருப்பதால், ஒவ்வொரு நிர்வாகியும் சங்க அபிவிருத்தி விஷயத்தில் தீர்க்காலோசனை செய்து தத்தம் கருத்துக்களை வெளியிட்டு, உபரிய யோசனைகளையெல்லாம் ஒன்றுசேர்த்துச் சங்கத்திற்குச் சரியானதொரு திட்டம் அமைக்க வேண்டும். அநேகருடைய ஆழ்ந்த ஆலோசனை எதற்கும் தேவை. சென்ற வருஷத்துப் பொதுக் கூட்டத்தில் ரூல்ஸ் எழுதுமாறு அமைக்கப்பட்ட கமிட்டி அங்கத்தினர்கள் இத் தருணத்தில் அவர்களால் தயாரிக்கப்பட்ட ரூல்ஸ்களையும் வெளியிட்டால் நலமாயிருக்கும்.

### ரோட்டு வசதிகள்

ஸ்தலஸ்தாபன ஆட்சியைப்பற்றி அடிக்கடி எழுதிக்கொண்டிருக்கிறேன். இன்னும் எழுதத்தான் வேண்டியிருக்கிறது. தேவாரம் கிராமவாசிகளிடம் ரூ 5,000 வாங்கிக்கொண்டு பண்ணைப்புரத்திலிருந்து தேவாரம் வரைக்கும் ரோட்டுப் போட்டுவிட்டார்கள். சரளை போடவில்லை. தேவாரத்து மழை இத் தாலுகாவில் தெரிந்ததுதான். மழைக் காலத்தில் வண்டிகள் சரியாகப் போகாது. "சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான்" என்ற முதுமொழி போன்று போர்டார் செய்துவிட்டார்கள். பழைய வண்டிப்பாதையிலாவது வண்டிகள் மெதுவாக வென்றாலும் கஷ்டமின்றிப் போகும். பிரயாணிகளும் நன்று நடப்பார்கள். [illegible]

—அம்மாபட்டி—குச்சனூர் ரோட்டுக்காக அநேக கிராமத்தார்களிடம் முன் பணம் வாங்கிக்கொண்டு வேலைகூட ஆரம்பிக்கவில்லை. பாளையும்—காமயகவுண்டன்பட்டி ரோட்டு விஷயமும் தேவாரத்தைப்போன்றே யிருக்கிறது. காமயகவுண்டன்பட்டியிலிருக்கும் தாலூகா-ஜில்லா போர்டு மெம்பர் இவ் விஷயத்தில் முயன்றால் இலகுவாயிருக்கும். தேவாரம்—போடிநாயக்கனூர் ரோட்டு விஷயம் பேச்சளவில் இன்னும் இருக்கிறது. முதலுக்கே மோசமாயிருக்கும்பொழுது வட்டிக்கணக்குப் பார்த்துப் பயனென்ன? எங்கும் கிராம நிர்மாணம் என்ற பேச்சு, அதிகமாயிருக்கிறது. பத்திரிகைகளிலும், மகாநாடுகளிலும், பிரசங்க மேடைகளிலும் அப்படியே.

### புருக் பாண்டுக் கம்பெனி எங்கே?

புரூக் பாண்டுக் கம்பெனியார் திருவாங்கூர் சமஸ்தானத்திலிருந்து தவறிக் கீழே சும்மா விழுகவில்லை. மந்தி மரத்திலிருந்து கீழே விழும்பொழுது ஏதேனும் இலையையோ கொம்பையோ பிடித்துக்கொண்டுதான் விழுமாம். இப்படிச் செய்ய அது தவறினால் "கொம்பிழந்த மந்தி" யாகி அவதிப்படும். இப்பொழுது புரூக் பாண்டுக் கம்பெனியார் கண்டமநாயக்கனூர் ஜமீன் மலையிலும், சிங்கம்பட்டி ஜமீன் மலையிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பிடித்திருக்கிறார்கள் என்று கேள்வி. தோல்வியிலும் எப்படியாவது எங்கேனும் சிறிது வெற்றி. அவர்களுக்குப் பணமே குறி. அவர்களுடைய ஊக்கத்தையும் உழைப்பையும் போற்ற வேண்டும்.

### கண்டமநாயக்கனூர் மலையிலே நிலங்கள்.

நாம் திருவாங்கூர் சமஸ்தானத்தில் நிலங்கள் கிடைக்காமல் திண்டாடுகிறோம். இப்பொழுது கண்டமநாயக்கனூர் ஜமீன் மலைக்குச் சொந்தக்காரப் பார்சித் கனவான்கள் குடியானவர்களுக்கு



வேண்டிய நிலங்களைப் பதித்துக்கொடுக்கிறார்கள். இதை ஏல விவசாயிகள் அவசியம் கவனிக்கவேண்டும். அநேகர் அங்கே நிலங்கள் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்விஷயத்தைப் பற்றிய "ஏல விவசாயி" யில் அடுத்த மாதத்தில் விரிவாக வெளிவரும்.

### விற்பனைக் கமிட்டி.

திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்க ஆதீனத்தின் அடியில் நியமிக்கப்பட்ட விற்பனைக் கமிட்டியின் கூட்டம் போடியில் மேமீ 11உ யில் கூடி முடிவு பெற்றது. இது சம்பந்தமான எல்லாக் கணக்குகளும் தீர்ந்தது. விர்ப்பனைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் ராவ்சாகேப் A. S. அழகணன் செட்டியாரவர்களும் ஷை கமிட்டிக் காரியதரிசி ஜனாப் முகைபதீன் பிள்ளை ராவுத்தரவர்களும் ஒற்றுமையுடன் நடந்து கொண்டது நமது சங்கத்தார் அனைவருக்கும் மிகமிகச் சந்தோஷமே.

# சங்கக் குறிப்புகள்.

## திருவாங்கூர் ஏல விவசாயிகளின் தலைமைச் சங்க நிர்வாகக் கூட்டம்.

1928 ஹு மேயீ 7உ பிற்பகல் 2 மணிக்கு போடிநாயக்கனூர் அரண்மனைக் கட்டிடத்தில் அடியிற் கண்ட விஷயங்களைத் தீர்மானிக்கும் பொருட்டுக் கூடினது.

### தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள்:—

1. கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி, சித்திரை மாதங்களின் கணக்குகளை நிர்வாக மெம்பர் T. B. கிருஷ்ணசாமிக் கவுண்டரவர்கள் ஆடிட் செய்து, ஆடிட் ரிப்போர்ட்டுடன் அடுத்த மீட்டிங்குக்குக் கொண்டு வரவும், மேல்வரும் மாதாந்திரக் கணக்குகளுக்கு மீட்டிங்கில் வவுச்சர்கள் ஆஜர் செய்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது.

2. "ஏல விவசாயிப்" பத்திரிகை நடைபெற்று வருவதற்காகச் சப் கமிட்டியார் செய்திருக்கிற ரிப்போர்ட்டின்படி, தலைமைச் சங்கக் காரியதரிசி அவர்கள், பத்திரிகையின் பத்திராதிபரிடம் ஒரு உடன்படிக்கை எழுதி வாங்கும்படிக்கும்; ஷை சப்கமிட்டியார் குறிப்பிட்டிருக்கிற உதவித் தொகையாகிய இனாமைத்தை ஒவ்வொரு கிளைச் சங்கங்களும் சந்தா ஈவுப்படி செலுத்திவிடவேண்டுமென்றும் தீர்மானிக்கலாயிற்று.

3. T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனியாருக்கும் சங்கத்திற்குமுள்ள ஒப்பந்த மூலமாக ஏற்பட்ட விவகாரங்களை சமாசமாக அங்கங்கள் வாபஸ் வாங்கிக்கொள்வதென்றும், தீர்மானத்துக்கு விரோதமாக ஆக்ஷன்களைத் தவிர வேறு விதமாய் விற்ற விவசாயிகளிடமிருந்து துலாம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் அந்தந்த சங்கங்களில் வசூலித்துத் தலைமைச் சங்கத்தில் சேர்க்க வேண்டுமென்றும் தீர்மானிக்கலாயிற்று.



4. T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கமிட்டியை 11-5-28உ வெள்ளிக்கிழமை காலை 9-மணிக்கு அரண்மனையில் கூட்டி ஷை கமிட்டியின் சகல வரவு செலவு கணக்குகளை முடிவு செய்து மாஜிமை த்திய னம் பிரசிடெண்டவர்களிடம் சேர்க்கும்படி சேல் கமிட்டி காரியதர் அவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

5. 14—5—28உ போடியில் நடைபெறும் ஆக்ஷனில் சரக்கு, அரிசி வாய்பிளவை, தக்கோலம் வகையராக்களை விற்று விடும்படிக்கும், அதில் மீதமிருப்பதையும் மற்ற கம்பம், கோம்பை, தேவாரம் சங்கங்களிலுள்ள சரக்கு தக்கோலம் அரிசி வகையறாக்களையும் 21-5-28உ திங்கட்கிழமை கோம்பையில் வைத்து ஆக்ஷனில் விற்றுக்கொண்டு இவ்வருஷ ஆக்ஷனை, சம்பூரணம் செய்யும்படி தீர்மானிக்கலாயிற்று.

6. சங்கஅபிவிருத்திக்குறிய விஷயங்களைத் தீர்மானிப்பதற்காக இந்த நிருவாகக்கூட்டத்தை 11-5-28உ வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஒத்தி வைத்திருக்கிறது.

### 1928 ஹு மேயீ 11உ இரவு 8 மணிக்கு ஷை கட்டிடத்தில் கூடி தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள்.

1. இனிமேல் சங்க அபிவிருத்தி விஷயத்துக்குறிய விஷயங்களைப் பற்றி ஒவ்வொரு கிளைச் சங்கங்களும் ஒவ்வொரு ஸ்கீம் தயாரித்து இது முதல் ஒரு மாதத்துக்குள் தலைமைச் சங்கத்துக்கு அனுப்பிக் கொடுக்க வேண்டுமென்றும், ஷை ஸ்கீம் வந்தவுடன் தலைமைச் சங்க நிர்வாகக் கூட்டத்தைக் கூட்டித் தீர்மானிக்க வேண்டுமாய் தீர்மானிக்கலாயிற்று.